வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 03 23.03.2022 புதன்கிழமை இதழ் : 108 பக்கங்கள் : 16

# சிங்கள மக்களை மட்டுமே பாதுகாப்பதுதான் தேசியமா?

## கஜேந்திரகுமார் எம். பி. கேள்வி

### நெருக்கடி தீர புலம்பெயர்ந்தோரை இணைக்கவும் ஆலோசனை



கொழும்பு, மார்ச் 23

**“தேசிய பாதுகாப்பு என்ற விடயத்தில் தேசியம் என்பது என்ன? வெறுமனே சிங்கள மக்களை மட்டுமே பாது காப்பதுதான் தேசியமா?”, என்று கேள்வி எழுப்பிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் “சிங்களவர்கள் தொடர்ச்சியாகப் பொய்களுக்கு ஏமாந்து வருகின்றமையே இந்த நாடு வீழ்ச்சியடைய காரணம்”, என்றும் கூறினார்.**

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூல இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

பயங்கரவாத தடை சட்டத்தில் திருத்தங்களை முன்வைத்துள்ள நிலையில் முக்கிய இரண்டு விடயங்களை அடையாளப்படுத்த வேண்டும். குறிப்பாக தடுப்புக்காவல் காலத்தை குறைந்துள்ளமை மற்றும் நீதிபதி சிறைக்கும், தடுப்பு முகாம்களுக்கும் சென்று தடுப்புக்காவலில் உள்ளவர்களை பார்வையிடுவது போன்றவை சித்திரவதையை தடுக்கும் செயல்பாடாக இருக்கும். ஆகவே இவை இரண்டுமே குறிப்பிடத்தக்க

15

## நிறைவேறியது பயங்கரவாத திருத்த சட்டம்!

கொழும்பு, மார்ச் 23

பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூல இரண்டாம் மதிப்பீடு எதிர்க் கட்சிகளின் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் 51 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது பாராளுமன்றத்தில் நேற்று

15

## பயங்கரவாத திருத்த சட்டமூலத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 23

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாதத் தடை (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள் (திருத்தம்) சட்டமூலத்தை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று காலை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இவ்வாறு முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் வெறும் ஒப்பனை அல்ல என்றும் நாட்டின் தற்போதைய தேவைகளை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட அர்த்தமுள்ள முயற்சி என்றும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

மேலும் பயங்கரவாத தடைச் சட்டத்தில் முன்வைக்கப்படும் ஒவ்வொரு திருத்தங்களும் இலங்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் வெளிவிவகார

15

## சர்வதேசத்தை இலக்கு வைக்கிறது பயங்கரவாத தடைச்சட்ட திருத்தம்

### முஜிபுர் ரஹ்மான் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 23

பயங்கரவாத தடைச் சட்ட திருத்தம் உள்ளூரில் பொதுமக்களுக்காக கொண்டு வரப்படவில்லை. மாறாக சர்வதேசத்தை திருப்திப்படுத்த கொண்டுவரப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாத தடைச் சட்ட விடயம், நீதியமைச்சர் அலி

15

## மக்களின் சிரமங்களுக்கு பொறுப்பேற்கிறது அரசு!

### அமைச்சரவை பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்காக மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது.

அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஷ்

15



## விக்னேஸ்வரன், சம்பந்தன் வாக்களிப்பை தவிர்த்தனர்!

கொழும்பு, மார்ச் 23

பயங்கரவாத தடுப்பு திருத்த சட்ட மூலத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான வாக்களிப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரா. சம்பந்தன், தமிழ் மக்கள் விடுதலைக் கூட்டணியின் தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் ஆகியோர் பங்கேற்கவில்லை.

வாக்கெடுப்புக்கான விவாதம் நடந்து கொண்டிருந்தபோது இருவரும் சபையில் இருந்தனர். ஆனால், வாக்கெடுப்புக்கான அழைப்பு விடுக்கப்படுவதற்கு சற்று முன்னர் சபையிலிருந்து வெளியேறினர்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

15



## தமிழ்நாடு நோக்கி மீண்டும் செல்லும் இலங்கை அகதிகள்

### சிறுவர்கள் மூவர் உள்ளிட்ட 6 பேர் அரிச்சல்முனையில்

சென்னை, மார்ச் 23

இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழ்நாடு சென்ற குடும்பம் ஒன்று தனுஷ்கோடி அரிச்சல் முனை பகுதியில் இறக்கி விடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் இருந்து மீண்டும் இந்தியா நோக்கி அகதிகளாக மக்கள் சென்றுள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டம் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடல் பகுதிக்கு அருகே உள்ள இந்திய கடல் பகுதியான 4ஆம் மணல் திட்டில்

15

## நாணய நிதியத்தின் அறிக்கை எங்கே?

### சபையில் ரணில் கேள்வி



கொழும்பு, மார்ச் 23

“இலங்கை தொடர்பில் சர்வதேச நாணய நிதியத் தால் வெளியிடப்பட்ட அறிக்கை பாராளுமன்றத்தில் இன்னும் சமர்ப்பிக்கப் படவில்லை.” - என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

இலங்கை தொடர்பில் சர்வதேச நாணய

15

## சர்வதேச நாணய நிதியத்தை நாட திட்டம் வகுக்கிறதாம் இலங்கை!

கொழும்பு, மார்ச் 23

தற்போதைய நிதி நெருக்கடி நிலையில் சர்வதேச நாணய நிதியத்துடன் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொருளாதார சபைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதாக அமைச்சரவை இணைப்பேச்சாளரும், பெருந்தோட்டத்துறை அமைச்சருமான அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இந்த விடயத்தை

15

## நிமல் லான்ஸா இராஜினாமா!



கொழும்பு, மார்ச் 23

ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான நிமல் லான்ஸா, தான் வகித்துவந்த இராஜாங்க அமைச்சு பதவியை நேற்று இராஜினாமா செய்தார்.

இது தொடர்பான பதவி துறப்பு கடிதத்தை ஜனாதிபதிக்கு அவர் அனுப்பி வைத்துள்ளார்.

அமைச்சர் ஜோன்ஸ் டன் பெர்ணான்டோவுடன் இணைந்து பணி யாற்றுவதில் சிக்கல் உள்ளது என்பதால், கடந்த மாதத்தில் இருந்து அமைச்சு பக்கம் நிமல் லான்ஸா செல்லாது இருந்தார்.

இந்நிலையிலேயே இராஜாங்க அமைச்சுப் பதவியை அவர் இராஜினாமா செய்துள்ளார். (அ)

## இப்படியும் நடக்கிறது...!

அது ஒரு புத்த மடாலயம். அதன் தலைவர் மிகவும் கவலையில் இருந்தார். ஒரு காலத்தில் அவரின் மடாலயம் அந்தப் பகுதியிலேயே சிறப்பும் மதிப்பும் பெற்று விளங்கிய ஆலயம். தற்போது மதிப்புக் குறைந்து பாதாளத்திற்குப் போய்க் கொண்டிருந்தது அவருக்குத் தெளிவாக விளங்கியது. மடத்தின் உள்ளேயே பிக்குகள் யாரும் ஒருவரை ஒருவர் மதிக்காமல் தன்னிச்சையாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

பொறுக்க இயலாமல் ஒரு நாள் அந்த மடாலயத்தின் தலைவர், தன்னைவிட அனுபவத்தில் சிறந்த ஒரு குருவைத் தேடிப் போனார். தன் பிரச்னையை எடுத்துச் சொன்னார்.

அந்தக் குருவும் சற்று நேரம் ஆழ்ந்து யோசித்து விட்டு பிறகு “உங்கள் மடத்தில் புத்தரே வந்து தங்கியிருக்கிறார். நீங்கள் எவரும் அவரைக் கண்டு கொள்ளவும் இல்லை. மதிக்கவும் இல்லை. பின் எப்படி சிறப்பு செழிக்கும்?“ என்று கேட்டார்.

இதைக் கேட்ட நம் தலைவர் வியப்பு மாறாமலே மடத்துக்குத் திரும்ப வந்து அங்கே இருந்த புத்த பிக்குக்களுக்கு விபரம் சொன்னார். அவர்களுக்கும் ஆச்சரியம். அந்தக் கணத்தில் இருந்து சுற்றியிருப்பவர்களில் ஒருவர் கடவுளாக இருக்கக் கூடும் என்ற அனுமானத்தில் எல்லோரையும் பணிவாகவும், அன்பாகவும், மிகுந்த மரியாதையுடனும் ஒவ்வொருவரும் அணுகினார்கள். நாளடைவில் மடத்தின் சிறப்பு பல மடங்கு உயர்ந்து போனது என்பதைச் சொல்லத் தேவையே இல்லை!

இது ஒரு மடாலயத்தின் கதைதான். ஆனால், இனிச் சொல்லப்போகின்ற விடயத்திற்கும், இந்தக் கதைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

இன்று இருக்கும் கட்சிகளில், அது தமிழ் தேசியக் கட்சிகளாகட்டும், அரசுடன் சேர்ந்து இயங்கும் ஈ. பி. டி. பி. போன்ற கட்சிகளாகட்டும் எல்லாவற்றிலும் நிலைமை ஒன்றுதான்.

ஒருவர் மட்டுமே கட்சியின் சகலதும். அவர் இல்லையென்றால், கட்சிக்கு என்ன ஆகும் என்பதை இன்று ஊகிக்க முடியாது.

சம்பந்தருக்குப் பிறகு கூட்டமைப்புக்கு என்ன நடக்கும் என்பதை எவராலும் இன்று உறுதியாகச் சொல்லிவிட முடியாது.

அதுபோல, விக்னேஸ்வரனின் கட்சி அவர் மட்டுமே தலைவர், மற்றும் எல்லாமும்.

இப்படியே ஒவ்வொரு கட்சியாக சொல்லிக்கொண்டே போகலாம்.

மஹிந்த ராஜபக்ஷ முன்னர் ஜனாதிபதியாக இருந்தபோது, அவரை ஓர் அரசனாகவே பலரும் குறிப்பாக டக்ளஸ் தேவானந்தா வர்ணிப்பது குறித்து முன்னரும் ஒரு தடவை இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால், அவர் அரசன் என்றால் நான் சிற்றரசன் என்று மார்தட்டிய டக்ளஸ், இன்றும் அவருடனான உறவில் அதே கம்பீரத்தோடேயே இருக்கிறார்.

டக்ளஸின் அரசியலோடு இந்த ஊர்க்குருவிக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும், அவர் தமிழ் அரசியலில் தவிர்க்கப்படமுடியாத ஒருவர் என்பதில் கருத்துவேறுபாடு இருக்கமுடியாது.

கடந்த வாரம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

முதலில் அவர், நயினாதீவு நாக விகாரையை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தும் வைபவத்தில் கலந்துகொள்ள நேராக நயினாதீவில் சென்று இறங்கினார். அவருடன் இணைந்துகொள்வதற்காக நயினாதீவுக்கு சென்ற அமைச்சருக்கு அங்கு செல்வதற்கு முன்னர் கடற்படையினர் நடத்திய அன்ரிஜென் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதியானது. இதனால் அவர் மஹிந்தர் கலந்து கொள்ளும் வைபவத்திற்கு போக முடியவில்லை.

பின்னர் யாழ்ப்பாணத்தில் இரண்டு தினங்கள் தங்கியிருந்த மஹிந்தருடன் கூடவே ஒட்டிக்கொண்டு, இரண்டு தினங்களும் காட்சி தந்தவர்கள் சுதந்திரக் கட்சி எம். பியான அங்கஜன் இராமநாதனும் அவரின் தனிப்பட்ட செயலாளரும் மைத்துனருமானவரும் மட்டுமே.

டக்ளஸ்தான் கொரோனா தொற்றால் அவருடன் இந்த உத்தியோகபூர்வ வைபவங்களில் கலந்துகொள்ள முடியவில்லை என்றாலும், அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஈ. பி. டி. பியின் சார்பில் யாரையும் இந்த இரண்டு தினங்களும் காணவே இல்லை.

இது சொல்கின்ற செய்தி என்ன? டக்ளஸ் இல்லையென்றால் கட்சியில் அடுத்த தலைவர் இல்லை என்பதா?

அங்கஜன் “கெத்தாக“, தனது செயலாளரையே கூட வைத்திருக்கமுடியும் என்றால், ஈ. பி. டி. பியை பிரதிநிதித்துவப்படுத்தி ஒருவர் கட்சியில் இல்லையா என்று கேட்காமல் இருக்க முடியவில்லை.

ஒருவரை மாத்திரமே நம்பிக்கொண்டு காலம் கடத்தும் நிலைமை சிவபூமியிலிருந்து சிவசேனை வரையும், கூட்டமைப்பிலிருந்து ஈ. பி. டி. பி. வரையும் தொடர் கதைதான் போலும்.!

**- ஊர்க்குருவி**

## மண்ணெண்ணெய்க்காக வவுனியாவில் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை!

வவுனியா, மார்ச் 23

வவுனியாவில் மண்ணெண்ணெயை பெற்றுக்கொள்வதற்காக விவசாயிகளும் இல்லத்தரசிகளும் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலையை அவதானிக்க முடிந்தது.

வவுனியாவில் இரு எரிபொருள் நிரப்பு நிலையங்களிலேயே நேற்று மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வரும் நிலையில் ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குடும்ப உறுப்பினர்கள் உள்ள அட்டைக்கு மாத்திரம் 1000 ரூபாவுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும் எனவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.



மற்றைய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 500 ரூபாவுக்கு மாத்திரமே எரிபொருள் வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, டீசலை பெற்றுகொள்வதற்காகவும் நீண்ட வரிசையில் வாகனங்கள் பல மணி நேரமாக காத்திருக்கும் நிலையையும் அவதானிக்க முடிந்தது. (அ)

## மின், தண்ணீர் கட்டணம் உயர்வு: அமைச்சரவையில் முடிவு இல்லை

கொழும்பு, மார்ச் 23

மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக வியலாளர் மாநாடு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவில்லை. எனினும், ரயில் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது-என்றார். (அ)

## காரைக்கால் அம்மையார் குருபூசை

யாழ்ப்பாணம், மார்ச் 23

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இந்த வருடத்தில் வாராந்த சொற்பொழிவும் மாதாந்தம் நாயன்மார் குருபூசை நிகழ்வையும் கனடாவில் வாழும் சிவஸ்ரீ பாலா. திருகுணானந்த குருக்களின் அனுசரணையில் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக காரைக்கால் அம்மையார் குருபூசை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு காரைக்கால் விசாலாட்சி சமேத விஸ்வநாதர் ஆலய மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி கிரியா பத்மராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சைவ சித்தாந்த துறை தலைவர் கலாநிதி திருமதி விக்னேஸ்வரி பவநேசன் பிரதம விருந்தினராகப் பங்கேற்கவுள்ளார். இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி மா. அனந்தலட்சுமி சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில், “தலையால் நடந்த அம்மை” எனும் தொனிப்பொருளில் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் சிறப்பு சொற்பொழிவு ஆற்றுவார். இதன்போது, மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும்.

விருந்தினர்களை உரைகளை தொடர்ந்து குருபூசையை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்துசமய பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படும். (ஐ)

## சட்ட விரோத செயல்களுடன் தொடர்புடைய பலர் கைது!

கிளிநொச்சி, மார்ச் 23

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளில் கடந்த 19ஆம் திகதி தொடக்கம் 21 திகதி வரையான காலப் பகுதியில் சட்ட விரோத செயல்களுடன் தொடர்புடைய பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 19ஆம் திகதி 15 லீற்றர் சட்டவிரோத கசிப்பை மோட்டார் சைக்கிள் மூலம் வேறொரு பகுதிக்கு கொண்டு சென்ற இரண்டு சந்தேக நபர்கள் தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அன்றைய தினமே கண்டிக்குளம் கடல்கரைப் பகுதியில் ஒருவரின் சங்கிலியை அறுத்து தப்பிச் செல்ல முற்பட்டவர் பொலிஸாரிடம் அகப்பட்டபோது அவர் சங்கிலியை விழுங்கியுள்ளார். உடனடியாக அவர் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அவரிடமிருந்து சங்கிலியை பொலிஸார் மீட்டனர்.

கடந்த 20ஆம் திகதி 2500 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, சில தினங்களுக்கு முன்பு மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டு காட்டுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 21ஆம் திகதி சந்தேக நபர் கைதானதுடன் மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

அன்றைய தினமே கல்லாறு பாடசாலைக்குச் சொந்தமான நீர் இறைக்கும் பம்பி திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் பறிமுதல் செய்யப்பட்டதுடன் சந்தேக நபரிடம் இருந்து மூன்று தண்ணீர் பம்பிகளையும் பொலிஸார் மீட்டனர்.இதேவேளை, வாகன அனுமதிப்பத்திரம் இன்றி மோட் டார் சைக்கிள் செலுத்திய 5 பேரை பொலிஸார் கைது செய்தனர். (அ)

## சொற்பொழிவு!

யாழ்ப்பாணம், மார்ச் 23

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் நடத்தப்படும் வாராந்த சிறப்பு சொற்பொழிவில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கந்தர் அலங்காரம் உணர்த்தும் முருகதத்துவம் என்ற தலைப்பில் இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் மாலை 5 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார். சிறப்புச்சொற்பொழிவை இளம் சைவப்புலவர் த.மனோஜ்குமார் வழங்குவார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
23.03.2022 புதன்கிழமை
பிலவ வருடம், பங்குனி 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இந்தியா - கொழும்பு - ஈழத்தமிழர்கள்!

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளுதல் - என்றொரு கூற்றுண்டு. அதாவது, சந்தர்ப்பங்கள் வாய்க்கின்றபோதே, அதனை கெட்டியாகப் பற்றிக்கொள்ள வேண்டும். ஏனெனில், ஒரு முறை கிடைத்த சந்தர்ப்பங்கள் மீண்டுமொரு முறை கிடைப்பது மிகவும் அரிதானது. இலங்கையின் அரசியல் வரலாற்றில், சிங்கள ஆட்சியாளர்கள் நெருக்கடிகளை எதிர்கொள்ளும்போது மட்டுமே, கீழிறங்கி வருவதற்கு முயற்சிப்பதுண்டு. இந்த சந்தர்ப்பம்தான், தமிழர்கள் தங்களின் எதிர்பார்ப்புக்களை வெற்றிகொள்வதற்கான சந்தர்ப்பமாகும். நாடு மோசமானதொரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றது. கொழும்பு, இதிலிருந்து மீள்வதற்கு இந்தியாவின் உதவியை நாடியிருக்கின்றது. இலங்கைத் தீவில் ஆர்வம் காண்பிக்கும் நாடுகளிலேயே - இந்தியா ஒன்றுதான், ஈழத் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் வலியுறுத்திவரும் ஒரேயொரு நாடாகும்.

ஆரம்பத்தில் இந்தியாவுடன் முரண்டுபிடிக்கும் போக்கைக் கடைப்பிடித்துவந்த ராஜபக்ஷ அரசாங்கம் தற்போது, தலைகீழாக செயல்பட்டு வருகின்றது. ஏனெனில், நெருக்கடி நிலைமையானது, அந்தளவுக்கு பாரதூரமானது. இந்த நெருக்கடிநிலையிலிருந்து மீள்வதற்கு இந்தியாவின் உதவி கட்டாயமானது. இந்தியாவின் ஆதரவு இல்லாவிட்டால், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியையும் பெற முடியாது. 2009இல், சர்வதேச நாணய நிதியம், இலங்கையின் மேலதிக கடன் கோரிக்கை விண்ணப்பத்துக்குப் பதிலளிப்பதை தாமதித்தது. மத்திய வங்கியின் இப்போதைய ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால்தான், அப்போதும் ஆளுநராக இருந்தார்.

அவர், அப்போது இந்தியாவின் நிதியமைச்சராக இருந்த பிரணாப் முகர்ஜியை நாடி உதவி கோரினார். முகர்ஜி, சர்வதேச நாணய நிதியத்திற்கு ஒரு தகவலை அனுப்பினார். அதாவது, நீங்கள் இலங்கைக்கு கடன் வழங்கவில்லையாயின், இந்தியா அதனை செய்யும். இந்தியா போன்றதொரு சக்தி வாய்ந்த உறுப்பு நாடொன்றின் கோரிக்கையை சர்வதேச நாணய நிதியத்தால் நிராகரிக்க முடியாது. இதனை விளங்கிக் கொண்டே, இந்தியா அவ்வாறானதொரு கோரிக்கையை முன்வைத்திருந்தது. இலங்கை நெருக்கடியை சந்திக்கும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்தியா, கொழும்புக்கு கைகொடுத்திருக்கின்றது. இப்போதும் கைகொடுக்கின்றது. ஆனாலும் சிங்கள தேசியவாதிகள் மத்தியில், இந்தியா தொடர்பிலும் காதலும் வெறுப்பும் என்னும் அடிப்படையிலான புரிதலே இருக்கின்றது.

இந்தியா கொழும்புக்கு பக்கபலமாக செயல்பட்டுவரும் நிலையில், சில விடயங்களில், கொழும்பு விட்டுக்கொடுக்க வேண்டிய தேவையிருக்கின்றது. எல்லா விடயங்களிலும் கொழும்பால் அடம்பிடிக்க முடியாது. இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு, இந்தியாவின் உதவியுடன், 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள குறைபாடுகளை நீக்கி, அதனை பலப்படுத்துவதற்கான உதவியை தமிழர் தரப்பு கோரலாம். “இறைமை பகிரப்பட்ட அதிகாரப்பகிர்வு“ - என்றெல்லாம் நிலைமை தெரியாமல் வாய்புசத்திக் கொண்டிருப்பதால் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை. இதேவேளை, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பில் பரிந்துரைப்பதாலும், எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை. ஐ. நாவின் இயலாமையை, மீண்டுமொரு முறை, உலகம் பார்த்துக் கொண்டிருக்கின்றது. உக்ரைன் விடயத்தில் வெறும் பார்வையாளர் வரிசையில் ஐ. நாவின் செயலாளர் அமர்ந்து கொண்டிருக்கின்றார்.

உலக அரசியலில் பலமான பிராந்திய நாடுகளின் முக்கியத்துவம் முன்னரைவிடவும், வலுவாக எழுச்சியடைந்து வருகின்றது. இந்த நிலையில் பிராந்தியத்திலுள்ள பலமான நாடுகளின் தயவு அனைவருக்கும் தேவையானது. பிராந்திய சக்திகளின் தீர்மானங்கள் மற்றும் முடிவுகளுக்கு அமைவாகவே மேற்குலக நாடுகள் தீர்மானங்களை நிறைவேற்றும். ஏனெனில், மேற்குலக நாடுகள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னர் - அதற்கு மாறாக பிராந்திய சக்திகள் முடிவுகளை மேற்கொள்ளுமாயின், நிலைமைகள் குழப்பமடையும். இந்த நிலைமைகளை விளங்கிக் கொண்டுதான், ஈழத் தமிழ் தேசிய கட்சிகள் என்போர் தீர்மானங்களை எடுக்க வேண்டும். அவ்வாறில்லாது தங்களின் விருப்பங்களை கூறிக் கொண்டிருப்பதால் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை. அரசியலமைப்பில் இருக்கின்ற, 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள குறைபாடுகளை, நீக்கி, ஆளுநரின் அதிகாரங்களை குறைப்பதற்கு இந்தியாவின் உதவியை தமிழர் தரப்பு நாடுவதன் மூலம், இந்தியா- இலங்கை - ஈழத் தமிழர்கள் என்னுமடிப்படையில், ஒரு நேர் கோட்டில் விடயங்களை சந்திக்கச் செய்தால், அது தமிழர்களுக்கான வெற்றியாகும்.

# ஆட்டம் காணும் இம்ரான் கான் ஆட்சி

நிருபமா சுப்பிரமணியம்

*பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் பதவியில் நீடிப்பது நிச்சயமற்றதாகத் தெரிகிறது. நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் ஆசிப் அலி ஜராத்ரியின் பாகிஸ்தான் மக்கள் கட்சி மற்றும் மௌலானா ஃபஸ் லுர் ரஹ்மானின் ஜமாத் உலமா-இஸ்லாம் ஆகிய எதிர்க்கட்சிகளின் கூட்டணி கூட்டாக பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை தேசிய சட்டமன்றத்தின் சபாநாயகரிடம் சமர்ப்பித்துள்ளனர். இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன் சாப் (PTI) கட்சியிலும் பலர் அவருக்கு எதிராகத் திரும்பியுள்ளனர்.*

*இம்ரான் கானின் நிலைமை இன்னும் மோசமாக உள்ளது, ஏனெனில், அவரும் பாகிஸ்தான் இராணுவமும் மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். 2018 தேர்தலுக்குப் பிறகு சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு, இம்ரான் கானின் பெருமை என்னவென்றால், அவரது அரசாங்கம், முந்தைய சிவில் அரசாங்கங்களைப் போலல்லாமல், இராணுவத்துடன் ஒத்துழைத்து செயல்பட்டது. எனவே இம்ரானின் அரசாங்கம் நிலையாக இருந்தது. அவரால் நிர்வாகத்தில் கவனம் செலுத்த முடிந்தது. கூட்டணியால் ஏற்பட்ட சிக்கலால், இம்ரான் கானின் தேர்தல் வெற்றிக்காக அல்லது தேர்ந்தெடுக்கப்படுவதற்காக இராணுவம் மற்றும் உளவுத்துறை கூடுதல் நேரம் வேலை செய்தது, இதனால் கட்சி பேதமின்றி தங்கள் சொந்த முயற்சியில் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் அவரது கட்சிக்கு ஆதரவளித்தனர்.*

*342 இடங்களைக் கொண்ட தேசிய சட்டமன்றத்தில் இம்ரான் கானின் கட்சி 155 இடங்களை வென்றது, மேலும் கூட்டணி கட்சிகளான முஷாரப் கால PML(Q), பலுகிஸ்தான் அவாம் கட்சி என்று அழைக் கப்படும் புதிய பலுசிஸ்தான் குழு மற்றும் பிற சிறிய கட்சிகளுடன்176 இடங்களை வென்றது. தலா மூன்று இடங்களில் வெற்றி பெற்ற மற்ற இரண்டு கட்சிகள் வெளியில் இருந்து ஆதரவளித்தன.*

*இந்த ஏற்பாட்டை இராணுவம் இணைந்து நடத்தியது. முஷாரப்புக்கு பிந்தைய காலத்தில் மக்கள் கட்சி மற்றும் PML(N) தலைமையிலான பிற சிவில் அரசாங்கங்களைப் போலல்லாமல், இராணுவத்திடம் இருந்து அரசாங்கத்தின் சுதந்திரமான செயல்பாட்டை உறுதிப்படுத்த எந்த குறிப்பிட்ட விருப்பமும் இல்லை. கொரோனா நெருக்கடியைக் கையாள்வதில் இருந்து அமெரிக்க-தலிபான் பேச்சுகள் வரை, தேசிய நிர்வாகம் மற்றும் வெளியுறவுக் கொள்கையில் இராணுவம் ஆற்றி வரும் பங்கில் பிரதமருக்கு எந்த பிரச்னையும் இருந்ததில்லை.*

*ஊழலை களையெடுப்பதாக கூறிய வாக்குறுதியைக் கடைப்பிடிப்பதில் ஆர்வத்து டன், நிர்வாகத்தில் சிறிதளவு நிபுணத்துவம் இல்லாமல், இம்ரான் கான் பொருளாதார சிக்கலில் தத்தளித்தார். கடந்த மாதம், சர்வதேச நாணய நிதியம் பாகிஸ்தானுக்கு 2019 இல் பெற்ற பிணை எடுப்பில் இருந்து 1 பில்லியனை டொலரை விடுவித்தது. மொத்த அளவான 6 பில்லியன் டொலரில், பாகிஸ்தான் இப்போது அந்தத் தொகையில் பாதியைப் பெற்றுள்ளது. ஆனால், பாகிஸ்தானில் உணவு மற்றும் எரிசக்தி விலைகள் அதிகமாகவே உள்ளன.*

*2020 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், மூன்று பெரிய எதிர்க்கட்சிகள் ஒன்று கூடி, இம்ரான் கானின் நிர்வாகத் தோல்விகள் மற்றும் காஷ்மீர் விவகாரத்தில் இம்ரானும் இராணுவமும் இந்தியாவிற்கு “விற்பனை” செய்ததைக் குறிவைத்து பேரணிகளை நடத்தினர்.*

*ஒரு காலத்தில், ஹமீத் அடுத்த இராணுவத் தளபதியாக இருப்பார் என்றும், 2022 இல் ஜெனரல் பஜ்வா ஓய்வு பெறுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்னதாக ஹமீத்துக்கு கார்ப்ஸ் தளபதி பதவி உயர்வானது, உயர் பதவிக்கான தகுதித் தேவையைப் பூர்த்தி செய்வதாகவும் கருதப்படுகிறது.*

*ஆனால், ஹமீத் இராணுவத்தின் நிறுவனப் பொறுப்பாக மாறினார். அவர் ஜெனரல் பாஜ்வாவின் செல்லப்பிள்ளையாக சில மாதங்களுக்கு முன்பு இருந்தபோதிலும், தலிபான் கையகப்படுத்தப்பட்ட பிறகு காபூலில் அவர் வெளிப்படையாக தோன்றி யது உட்பட பல சர்ச்சைகள் அவருக்கு எதிராக இருந்தது.*

*புதிய ஐ. எஸ். ஐ. தலைவராக லெப்.ஜெனரல் நதீம் அஞ்சூம் நியமனத்தில் கையெழுத்திட இம்ரான் கான் மூன்று வாரங்களாக மறுத்ததால், பிரதமரும் ஹமீதும் ஒருவரையொருவர் தங்களின் அந்தந்த லட்சியங்களுக்கு உத்தரவாதம் அளிப்பவர்களாக பார்க்கக்கூடும் என்ற அச்சத்தை இராணுவத்தில் எழுப்பியது. ஹமீத் பிரதம மந்திரியின் உதவியுடன் இராணுவ தலைமையை ஏற்றால், ஹமீதின் உதவியுடன் இம்ரான் கான் 2023 இல் மீண்டும் வெற்றி பெறலாம்.*


*நம்பிக்கை வாக்கெடுப்புக்கு ஒரு நாள் முன்னதாக மார்ச் 27 அன்று திட்டமிடப்பட்ட போட்டி நிகழ்ச்சிகள் பெரிய அளவிலான வன்முறை மற்றும் இரத்தக்களரி பற்றிய கவலைகளை எழுப்பியுள்ளன.*

*மார்ச் 19 அன்று, உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம், “அராஜகத்தை” தடுக்க தலையிடுமாறும், நம்பிக்கையில்லா வாக்கெடுப்பில் அரசியல் சாசனத்தின்படி செயல்படுமாறு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் உத்தரவிடுமாறும் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது.*

*அரசியலமைப்புச் சட்டத்தின்படி, சபாநாயகர் அசாத் கைசர் மார்ச் 22ஆம் தேதிக்குள் பாராளுமன்றத்தைக் கூட்டியிருக்க வேண்டும். அவர் அமர்வைக் கூட்டுவதில் இழுத்தடிப்பதாகக் காணப்பட்டது. இந்த அத்துமீறலை கவனத்தில் கொள்ளுமாறு எதிர்க்கட்சிகள் நீதிமன்றத்தை நாடின. ஆனால், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் கூட்டத்திற்கு அவர்களால் கோரப்பட்டுள்ளதால், மார்ச் 22-23 திகதிகளில் சட்டமன்ற வளாகம் கிடைக்காததைக் காரணம் காட்டி, சபாநாயகர் இப்போது கூட்டத் தொடரை மார்ச் 25 அன்று கூட்டியுள்ளார். சட்டசபை கூட்டப்பட்ட மூன்று முதல் ஏழு நாட்களுக்குள் வாக்கெடுப்பு நடக்க வேண்டும்.*

*இம்ரான் கான் தனது பதவியை காப்பாற்றிக் கொள்ள உச்சநீதிமன்றம் மீது நம்பிக்கை வைத்துள்ளார்.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
அனைத்து விஷயத்திலும் கவனமாக அடிஎடுத்து வையுங்கள். மதியத்திற்கு பிறகு மனநிறைவும், மகிழ்ச்சியும் கூடுதலாகும். சகோதர உறவுகளால் அலைச்சல்,செலவுகள் இருக்கும்.

**இடபம்**
புதிய மின்னணு சாதனம்வாங்கி மனநிறைவு அடைவீர்கள். சகமனிதர்களிடம் பொறுமையாக இருப்பது நற்பலனை தரும். பணியாளர்கள் இன்று முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மிதுனம்**
வெளிநாட்டிலிருந்து நன்மை ஒன்றை எதிர்பார்க்கலாம். ஆன்மிகம், சமூக விஷயங்களில் ஈடுபாடு ஏற்படும். புதிய வேலை கிடைக்கும், வாழ்வில் உயர்வீர்கள்.

**கடகம்**
தாயாரிடமிருந்து உதவியும் ஆதரவும் பாசமும் கிடைக்கும். பணவரவு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். உங்களுக்கு வர வேண்டிய பாக்கி பணம் வசூலாகும்.

**சிம்மம்**
பதவி,சம்பளம் இரண்டும் உயரலாம். மகிழ்ச்சி கூடும். நண்பர்களை சந்தித்து மகிழ்ச்சி அடைவீர்கள். உறவுகளிடையே இருந்து வந்த இறுக்கமான சூழ்நிலை மாறும்.

**கன்னி**
முன்னேற்றப் பாதையில் அடிஎடுத்து வைப்பீர்கள். முயற்சியில் வெற்றி கிட்டும். இனிய செய்தி வரும். இன்று உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

**துலாம்**
நண்பர்களால் எதிர்பாராத நன்மை ஒன்று கிடைக்கும். வெளிநாட்டிற்கு சென்று பணிபுரிய வேண்டி வரும். கவலைகள் தீரும். பங்குதாரர்களை வீணாக சந்தேகிக்க வேண்டாம்.

**விருட்சிகம்**
நண்பர்களிடம் அதிகமான நெருக்கம் காட்ட வேண்டாம். பணியாளர்களின் எண்ணங்கள் ஈடேறும். பெண்கள் நகை வாங்குவீர்கள். திட்டமிட்ட செயல்களை முடிப்பீர்கள். விறுவிறுப்பான நாள்.

**தனுசு**
கடன் கொடுக்கவோ, வாங்கவோ வேண்டாம். எதிலும் சிக்கனம் தேவை. நீங்கள் உண்டு, வேலையுண்டு என்றிருப்பது நல்லது. யாருடனும் பகை உருவாகாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

**மகரம்**
சுப விஷயங்களுக்காக தயாராவீர்கள். மகிழ்ச்சிகரமான நாள். குழந்தைகள் நன்மை அடையும்படியான செயல்களை செய்வீர்கள். நீங்கள் எதிர்பார்த்த வங்கிக் கடன் கிடைக்கும். மகிழ்ச்சி கூடும்.

**கும்பம்**
கடன் பிரச்னை குறைய ஆரம்பிக்கும். நோய் அகலும். பழைய கசப்பான சம்பவங்கள் பற்றி யாரிடமும் விவாதம் செய்ய வேண்டாம். சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள்.

**மீனம்**
நண்பர்கள், உறவினர் உங்கள் புகழைப் பரப்புவர். நல்ல இடத்தில் வேலை அமையும், பணப்புழக்கம் அதிகரிக்கும். இனிய நிகழ்வுகள் உண்டு. யாரையும் விமர்சிக்க வேண்டாம்

# இடைத்தேர்தல் படிவத்தில் ஜெயலலிதா கைரேகை வைத்தது எனக்குத் தெரியும்

## ஆறுமுகசாமி ஆணையத்தில் ஓபிஎஸ் தொடர்ந்து சாட்சியம்

சென்னை, மார்ச் 23

திருப்பரங்குன்றம், தஞ்சாவூர், அரவக்குறிச்சி ஆகிய 3 தொகுதிகளுக்கான இடைத் தேர்தல் படிவங்களில் ஜெயலலிதா கைரேகை வைத்தது தனக்குத் தெரியும் என்று அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.



முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக விசாரித்து வரும் ஆறுமுகசாமி விசாரணை ஆணையத்தின் முன்பு அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம் இரண்டாவது நாளாக நேற்று ஆஜராகி தனது வாக்கு மூலத்தை அளித்தார். அப்போது ஆணையத்தின் சார்பில், இடைத் தேர்தலையொட்டி அந்த படிவங்களில் ஜெயலலிதாவிடம் கைரேகை பெறப்பட்டது தெரியுமா என கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த ஓ.பன்னீர்செல்வம், "திருப்பரங்குன்றம், தஞ்சாவூர், அரவக்குறிச்சி ஆகிய 3 தொகுதிகளுக்கான இடைத் தேர்தல் படிவங்களில் ஜெயலலிதா கைரேகை வைத்தது எனக்கு தெரியும்.

அப்போலோ மருத்துவமனையில் ஜெயலலிதா சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த போது, அவரது உடல் நலம் குறித்து சசிகலா என்னிடம் ஓரிரு முறை ஜெயலலிதா நன்றாக இருப்பதாக கூறினார். இந்த தகவல் குறித்து நான் சக அமைச்சர்களிடம் மட்டுமே கூறினேன். பொது வெளியில் இதுதொடர்பாக நான் பேசவில்லை.

அரசாங்கப் பணி தொடர்பாக ஜெயலலிதா கூறியதாக சசிகலா எந்த வொரு தகவலையும் என்னிடம் தெரிவிக்கவில்லை.

ஜெயலலிதாவுக்கு என்னென்ன உணவுகள் வழங்கப்பட்டது என்பது குறித்து எனக்குத் தெரியாது" என்று கூறியுள்ளார். தொடர்ந்து விசாரணை நடந்துவருகிறது.

முன்னதாக நேற்று ஆறுமுகசாமி ஆணையத்தின் விசாரணைக்கு ஆஜராகியிருந்த ஓ.பன்னீர்செல்வத்திடம் 78 கேள்விகள் கேட்கப்பட்டன. இதில் பெரும்பாலான கேள்விகளுக்கு அவர் "எனக்கு எதுவும் தெரியாது" என்று பதிலளித்திருந்தார்.

# மேகதாது விவகாரத்தில் மத்திய அரசுக்கு தி.மு.க. அழுத்தம் கொடுக்க வேண்டும்

## டிடிவி.தினகரன் கருத்து

சென்னை, மார்ச் 23

மேகதாது அணை விவகாரத்தில் தி.மு.க. மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என டிடிவி.தினகரன் கருத்து தெரிவித்துள்ளார்.

மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டுவதற்கு தமிழக அரசு தொடர்ந்து எதிர்ப்பு குரல் கொடுத்து வருகிறது. இந்த எதிர்ப்புக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் தமிழக சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் அணை விவகாரம் குறித்து தனித்தீர்மானம் கொண்டு வரப்பட்டு அவையில் நிறைவேற்றப்பட்டது.

இது குறித்து கருத்து தெரிவித்த அ.ம.மு.க. பொதுச் செயலாளர் தினகரன் "மேகேதாட்டுவில் அணை கட்டுவதற்கு கர்நாடக அரசு நிதி ஒதுக்கி பணிகளைத் தொடங்கி விட்டது. அதற்கு பிறகு, மிகத் தாமதமாக தூக்கம் கலைந்து விழித்துள்ள திமுக அரசு மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்து தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. நாடாளுமன்றத்தில் அதிக எம்.பி.க்களை வைத்திருக்கிறதோடு தமிழகத்தின் ஆட்சி அதிகாரத்தையும் வைத்துள்ள முதலமைச்சர் ஸ்டாலின் மத்திய அரசுக்கு உரிய அழுத்தம் கொடுத்து மேகதாது அணை கட்டுவதை தடுத்து நிறுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# இந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு கடத்தப்பட்ட 29 சிலைகள் மீட்கப்பட்டன

## திருஞானசம்பந்தர் சிலை உட்பட 4 தமிழகத்தை சேர்ந்தவை

சென்னை, மார்ச் 23

தமிழகம் உட்பட இந்தியா முழுவதும் திருடப்பட்டு ஆஸ்திரேலியாவுக்கு கடத்தப்பட்ட 29 சிலைகள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றில் 4 சிலைகள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவை. தமிழகத்தைச் சேர்ந்த 4 சிலைகள் தமிழகத்திற்கு விரைவில் அனுப்பி வைக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த சிலைகளில், சைவத் துறவி திருஞானசம்பந்தரின் நின்ற நிலையில் உள்ள வெண்கலச் சிலை, நடனமாடும் நிலையில் உள்ள திருஞானசம்பந்தரின் வெண்கலச் சிலை, சந்தேஸ்வர நாயன்மாரின் வெண்கலச் சிலை மற்றும் சிவபெருமான் சிலை ஆகியவை தமிழ்நாட்டைச் சேர்ந்தவை.

இதில், நின்ற நிலையில் உள்ள திருஞானசம்பந்தர் சிலை மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே திருசைக்காடு ஸ்ரீ சயவனேஸ்வரர் கோயிலுக்கு சொந்தமானது. இந்த சிலை கி.பி 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அதாவது சோழர் கால சிலையாகும். வில்லியம் வுல்ஃப் என்ற 'சிலை கடத்தல் காரர்' 1965 இல் இந்த சிலையைத் திருடி ஆஸ்திரேலியாவிற்கு கடத்தியதாகக் கூறப்படுகிறது.

# கும்பகோணத்தில் சசிகலா சுற்றுப்பயணம்

கும்பகோணம், மார்ச் 23

கும்பகோணம் பகுதியில் சுற்றுப்பயணம் செய்யும் சசிகலா, நேற்று ஒரே நாளில் 7 கோயில்களில் தரிசனம் செய்தார்.



மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் தோழி வி.கே.சசிகலா தஞ்சாவூர் வந்து நகரில் உள்ள அவரது வீட்டில் தங்கியுள்ளார். கடந்த 20ஆம் திகதி கணவர் ம.நடராசனின் 4ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, விளார் சாலையில் உள்ள அவரது நினைவிடத்துக்கு சென்று சசிகலா அஞ்சலி செலுத்தினர்.

பின்னர், மீண்டும் தஞ்சாவூரில் தனது வீட்டில் தங்கிய சசிகலா, நேற்று காலை 7.10 மணிக்கு கும்பகோணம் பகுதிகளில் பிரசித்திப்பெற்ற கோயில்களில் தரிசனம் செய்ய புறப்பட்டார்.

சசிகலா சென்று வழிபட்ட அனைத்து கோயில்களிலும் இன்று சிறப்பு ஹோமம், சிறப்பு அர்ச்சனைகள் சசிகலா சார்பில் நடைபெற்றது. முன்னதாக, திருவிசநல்லூர் பகுதியில், காரில் சென்றுக் கொண்டிருந்த போது அவரது ஆதரவாளர்கள் பலரும் கை அசைத்த நிலையில், காரை விட்டு இறங்கி அங்குள்ளவர்களிடம் நலம் விசாரித்தார்.

## சட்டம் மருதருக்கே



சட்டங்களும், ஒழுங்கு முறைகளும், விதிமுறைகளும் இன்று மனிதனுக்கு தேவையாகயுள்ளது. இவை இல்லை என்றால் மனிதனின் நிலை மிகவும் மோசமாகும். மனிதன் மிருகமாக மாறலாம். ஒழுங்குகள், விதிமுறைகள், சட்டங்கள் இவை வாழ்க்கையில் பெறும் முக்கியத்துவம். இவற்றைப் பின்பற்றும் முறை பற்றி இந்த நற்செய்திப் பகுதி அடுத்துக் கூறுகிறது. யேசு தான் சட்டத்தின் பொருளும், முழுமையும். அவரைப் பின்பற்றுவதே சட்டம் அனைத்தையும் பின்பற்றுவதாகும்.

"சட்டங்கள் மனிதருக்காகவேயன்றி மனிதன் சட்டங்களுக்காக அன்று" என்பது புதிய ஏற்பாட்டின் உண்மை ஓய்வுநாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது. மனிதர் ஓய்வுநாள்களுக்காக உண்டாக்கப்படவில்லை. (மாத் 2:27) சட்டங்கள் மனிதனைக் கட்டுப்படுத்த வேண்டும். அச்சட்டங்களுக்குப் புதுப்பொருள் கொடுக்க வேண்டும். எனவே யேசு சட்டங்களை அழிக்க வரவில்லை. அவற்றை நிறைவேற்றுவதற்கே வந்தார். (மத்: 5:17) என்பதன் வழியாக இயேசுவிலே அனைத்துச் சட்டங்களும் புதுப் பொருள் பெறுகின்றன என்பதாகும்.

இயேசுவின் கண்ணோக்கிலே அன்பு தான். முதல் சட்டம். எனவே சட்டங்களுக்கு நாம் அடிமையன்று. மாறாக அன்பின் அடிமைகள் என்பதை உணர்ந்து சுதந்திரமாக நடக்கக் கற்றுக் கொள்ள இத்தவக்காலத்தில் முயல்வோம்.

அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா.

# அரச பின்வரிசை எம்.பிக்கள் கடும் அதிருப்தி நிலையில்!

## அரசின் செயற்பாடுகளால் விசனம்

**கொழும்பு, மார்ச் 23**

**அரசின் செயல்பாடுகள் தொடர்பில் ஆளுங் கட்சியின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர் என தெரியவருகின்றது.**

எனவே, நாட்டு மக்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு உரிய தீர்வுப்பொறிமுறை விரைவில் முன்வைக்கப் படாவிடின் அவர்கள் அரசியல் தீர்மானமொன்றை எடுக்கக் கூடும் எனவும் அறியமுடிகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி உட்பட ஒரு சில பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களைத் தவிர, ஏனைய ஆளுங்கட்சி பின்வரிசை எம்.பிக்கள் கடும் அதிருப்தியிலேயே உள்ளனர்.

"நாட்டு மக்கள் பட்டினியில் வாடுகின்றனர். எங்களுக்கு சாபம் இடுகின்றனர். வீதியில் இறங்கி செல்ல முடியவில்லை. எனவே, தீர்மானம் எடுக்கும் இடத்தில் இருப்பவர்கள் உரிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு இல்லா விட்டால் தீக்கமான முடிவை எடுக்க நேரிடும்." - என ஆளுங் கட்சியின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அதேவேளை, சில அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்களும் அரசின் செயல் பாடுகள் தொடர்பில் அதிருப்தி நிலையிலேயே உள்ளனர் எனவும் கூறப்படுகின்றது. (அ)

# யாழ். போதனா வைத்தியசாலையில் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு

## கண் சத்திர சிகிச்சைகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். போதனா வைத்திய சாலையில் கண் சத்திர சிகிச்சைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அதன் பதில் பணிப்பாளர் வைத்தியர் மு.நந்தகுமார் தெரிவித்தார்.

மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கண் சத்திர சிகிச்சைக்கான மருந்துப் பொருட்கள் சிலவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

அத்துடன் சில மருந்துப் பொருட்கள் குறைந்தளவிலேயே உள்ளன.

இதனாலேயே சத்திர சிகிச்சைப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் மருந்துப் பொருட்களுக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அவை கிடைக்கும் பட்சத்தில் மீண்டும் சத்திர சிகிச்சைகள் முன்னெடுக்கப்படும் என யாழ். போதனா வைத்திய சாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் மு.நந்தகுமார் மேலும் கூறினார். (அ)



# கரவெட்டி கமநல சேவைகள் நிலையத்தில் புத்தரிசி விழா

யாழ்ப்பாணம், மார்ச் 23

55ஆவது தேசிய புத்தரிசி விழாவுக்கான அரிசியை வழங்குவதற்காக கமநல சேவை நிலையங்களில் இடம்பெறும் புத்தரிசி விழா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கரவெட்டி கமநல சேவை நிலையத்திலும் இடம்பெற்றது.

அறுவடை செய்யப்பட்ட நெல்லின் முதற் பகுதியை புத்த பெருமானுக்கு காணிக்கையாக செலுத்தும் வருடாந்த புத்தரிசி விழா ஏப்ரல் 03ஆம் திகதி அக்ர சாஸ்ய ஜெயஸ்ரீ மகா போதியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்காக மாவட்ட ரீதியாக புத்தரிசி வழங்குவதற்கான விழா முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் யாழ்ப்பாண மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கரவெட்டி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், கமக்கார அமைப்பினர், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (அ)

# பணவீக்கம் உச்சம்

கொழும்பு, மார்ச் 23

இலங்கையின் பணவீக்கம் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் நிலையில், தற்போது அது 17.5 வீதத்தை எட்டியுள்ளது.

இலங்கை வரலாற்றில் பதிவான அதிக பணவீக்க நிலைமை இதுவாகும் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் 16.8 வீதமாக இருந்த பணவீக்கம், பெப்ரவரியில் 17.5 வீதமாக அதிகரித்துள்ளது.

இந்த மாதம் மேலும் அதிகரிப்பைக் காட்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# பாதுகாப்பை வழங்கவே ராணுவம் குவிக்கப்பட்டது

## அமைச்சர் காமினி லொக்குகே

கொழும்பு, மார்ச் 23

வரிசையில் காத்திருக்கும் மக்களுக்கும் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் பாதுகாப்பை வழங்கவே இராணுவம் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

இது குறித்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாக எரிசக்தி அமைச்சர் கூறினார்.

கடந்த சில நாட்களாக எரிபொருள் வரிசையில் காத்திருந்த மூன்று பேரும் தகராறு ஏற்பட்டதால் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.



இந்நிலையில் எரிபொருள் விநியோகம் செய்யப்படுவதை கண்காணிப்பதற்காக எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஒவ்வொன்றிலும் தலா இரண்டு இராணுவ சிப்பாய்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். (அ)

# எரிபொருள் நிலைய கண்காணிப்பு நடவடிக்கைகளில் இராணுவத்தினர்!

கொழும்பு, மார்ச் 23

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கண்காணிப்பு நடவடிக்கைளை தீவிரப்படுத்தும் நோக்கில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நிலவும் நிலைமையைக் கட்டுப்படுத்த இவ்வாறு இராணுவத்தினர் களமிறக்கப் பட்டுள்ளதாக, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன தெரிவித்தார்.

நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடுமையான நெருக்கடி நிலை உருவாகியுள்ளது.

கடும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசையில் பொதுமக்கள் நிற்பதே இதற்கு காரணமாகும்.

இன்றைய நாட்களில் எரிபொருளைப் பெறுவதற்குப் போராடும் மக்கள் மத்தியில் அமைதியின்மை ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

இதன் விளைவாக, மக்களிடையே தகராறுகள் ஏற்படுவதுடன் கடந்த ஞாயிறு கொலைச் சம்பவமொன்றும் பதிவாகியது.

அத்துடன் அண்மையில் எரிபொருள் வரிசையில் காத்திருந்த முதியவர்கள் இருவர் உட்பட 3 பேர் உயிரிழந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதனை தொடர்ந்து, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தீவிர கண்காணிப்புகளை மேற்கொள்ளும் நோக்கில் இராணுவத்தினரை ஈடுபடுத்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (அ)

# சடுதியாக உயர்ந்த முட்டையின் விலை

கொழும்பு, மார்ச் 23

நாட்டில் முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதுடன் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது முட்டையின் விலை 32 முதல் 33 ரூபாய் வரையிலும், கோழி இறைச்சி 850 முதல் 900 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கோழி மற்றும் முட்டை வியாபாரிகள் கருத்து தெரிவிக்கையில், கோழி தீவனத்தின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளனர். (அ)



## சர்வதேச வனாந்தர தினத்தை முன்னிட்டு கழிவு அகற்றும் செயற்பாடு மண்டைதீவில்

யாழ்ப்பாணம், மார்ச் 23

சர்வதேச வனாந்தரங்கள் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினால் நேற்றுக் காலை மண்டைதீவுப் பகுதியில் திண்மக்கழிவு அகற்றும் செயற்பாடு நேற்று காலை 6.30மணி முதல் 9.30மணிவரை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக காணப்படும் மண்டைதீவு கண்டல் தாவரங்களுக்கிடையே இருந்த திண்மக்கழிவுகள் வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினருடன் இணைந்து கடற்படையினரால் அகற்றப்பட்டன.

இந்த நிகழ்வில் வட்டார வன அதிகாரி டி.எம்.டி.ஆர். கருணாநாயக்க, பகுதி வன அதிகாரி எஸ்.உதயதீபன், பகுதி வன அதிகாரி ஜி.எம்.சி.முகேந்திரம், பகுதிவன அதிகாரி பி. சஞ்ஜீவன், வனவரிவிளக்கல் உத்தியோகத்தர் எல்.ராஜ்குமார், எல்.பிருந்தா,

மண்டைதீவு கடற்படைப் பொறுப்பதிகாரி வேலுசுமண, கடற்படையினர் என பலர் கலந்துகொண்டனர். (அ)

# இலங்கையில் இராணுவ செலவு குறைப்பை உறுதி செய்யுங்கள்

### நாணய நிதியத்தை வலிறுத்தும் ஹரி ஆனந்தசங்கரி

ஒட்டாவா, மார்ச் 23

**இலங்கைக்கான நிதி உதவிகளின்போது, இராணுவச் செலவினங்களைக் கடுமையாகக் குறைக்கும் என்பதை உறுதிப்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியத்துக்கு கடிதம் எழுதியுள்ளார் கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி.**



“உணவு, கல்வி, சுகாதாரம் மற்றும் அத்தியாவசிய சேவைகள் குறைக்கப்படாமல் இருப்பது அவசியம். ஒட்டுமொத்த அரசின் செலவீனத்தில் 15 சதவீதத்திற்கும் அதிகமான இராணுவச் செலவுகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை” என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மார்ச் 20ஆம் திகதியிடப்பட்டு, சர்வதேச நாணய நிதிய நிர்வாக இயக்குநருக்கு இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (அ)

## பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும்

### மகாநாயக்கர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, மார்ச் 23

பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தேசிய கொள்கையொன்றை வகுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி மல்வத்து மற்றும் அஸ்கிரி மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

மேலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்ட பல தரப்பு மாநாட்டை கூட்டி, நிலையான அபிவிருத்திக்காக திட்டமொன்றை வகுப்பதன் முக்கியத்துவம் உள்ளிட்ட 14 விடயங்களை சுட்டிக்காட்டி இந்த கடிதத்தை அவர்கள் எழுதியுள்ளனர்.

அந்நியச் செலாவணி நெருக்கடியைத் தணிக்க அடையாளம் காணப்பட்ட முன்னுரிமைகளின் பட்டியலின்படி, அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் மற்றும் உள்நாட்டுப் பொருளாதார மாதிரியை உருவாக்குதலும் பரிந்துரைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.


பொருளாதார நெருக்கடி காலத்தில் முறையற்ற நிதியீட்டல்களுக்காக அத்தியாவசியமான பொருட்களில் செயற்கையாகப் பற்றாக்குறையை உருவாக்கும் மோசடி வியாபாரிகளுக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் மகாநாயக்க தேரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முதலீட்டை ஊக்குவிக்கவும், வெளிப்படையான பொருளாதாரத் திட்டத்தின் மூலம் வெளிநாட்டுப் பணப் பரிமாற்றத்தை அதிகரிக்கவும், ஏற்றுமதிப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தையும் இந்த கடிதம் முன்மொழிந்துள்ளது. நாட்டில் புதிய முதலீடுகளை ஊக்குவித்தல், அரசக் கடனை மறுசீரமைத்தல், குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு நிவாரணம் வழங்குதல், வீண்விரயம், ஊழல் மற்றும் வள துஷ்பிரயோகம் ஆகியவற்றைத் தடுக்க நிலையான திட்டத்தை வகுக்கவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## இந்தியாவுடன் இலங்கை அரசு செய்துகொண்ட உடன்படிக்கைகளை பகிரங்கப்படுத்தவேண்டும்

### எல்லே குணவன்ஸ தேரர் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 23



இந்தியாவுடன் இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு தொடர்பில் கைச்சாத்திடப்படவுள்ள மூன்று உடன்படிக்கைகள் குறித்த விவரங்களை ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கும் பொது மக்களுக்கும் பகிரங்கப்படுத்த வேண்டும் என எல்லே குணவன்ஸ தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

கடல்சார் பாதுகாப்பு குறித்த ஒத்துழைப்பை அதிகரிக்கும் விதத்தில் இலங்கையும் இந்தியாவும் மூன்று உடன்படிக்கைகளில் கைச்சாத்திடவுள்ளன என இந்துஸ்தான் ரைம்ஸ் தெரிவித்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு பில்லியன் டொலர் கடன் பெறுவதற்காக இந்தியாவுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கையில் இடம் பெற்றுள்ள விவரங்களை அரசாங்கம் இன்னமும் பகிரங்கப்படுத்தவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் அவசர சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் எந்த பகுதியிலும் உள்ள தேசிய வளங்கள் சுரண்டப்படுவது மற்றும் பணத்துக்காக விற்கப்படுவதை நான் கடுமையாக எதிர்ப்பேன் என அவர் கூறினார். (அ)

## அரச பல்கலைகளில் 16.6 வீதமான மாணவர்கள் பாலியல் துன்புறுத்தலை எதிர்கொள்கின்றனர்!

கொழும்பு, மார்ச் 23

அரச பல்கலைக்கழகங்களில் 16.6 வீத மாணவர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாவதாக புதிய ஆய்வில் வெளிவந்துள்ளது.

அண்மைக்காலமாக இலங்கையில் உள்ள அரச பல்கலைக் கழகங்களில் பகிடிவதை மற்றும் பாலியல், பாலின அடிப்படையிலான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன.

இந்த செயற்பாடுகள் கவலையளிப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

51 வீதத்துக்கும் அதிகமானோர் வாய்மொழி துன்புறுத்தலுக்கும், 34.3 வீதமானோர் உளவியல் வன்முறைக்கும், 23.8 வீதமானோர் உடல் ரீதியான துஷ்பிரயோகத்துக்கும், 16.6 வீதமானோர் பாலியல் துன்புறுத்தலுக்கும் ஆளாகியுள்ளனர்.

ஊழியர்களில் 44 வீதம் பேர் வாய்மொழி துஷ்பிரயோகத்துக்கும், 22.3 வீதம் பேர் பாலியல் இலஞ்சம் கோரியதாகவும், 19.9 வீதம் பேர் உடல் ரீதியான பாலியல் வன்முறையை அனுபவித்ததாகவும் அறிக்கை வெளிப்படுத்துகிறது.

மேலும் பொதுத்துறை பல்கலைக்கழகங்களில் படிக்கும் மாணவர்களில், 21 வீதம் பேர் வாய்மொழி பாலியல் துஷ்பிரயோகத்திற்கும், 1.5 வீதம் பேர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு கட்டாயப் படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பகிடிவதை என்பது முதலாவது ஆண்டில் மட்டுமே நடப்பதாகக் கருதப்பட்டாலும், அவை தொடர்வதாகவும் குறித்த ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது.

மாணவர்கள் துன்புறுத்தப்படுவதைத் தடுக்கும் நோக்கில் சமீபத்தில் மேலதிக விதிமுறைகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வகுத்துள்ளது.

,அதன்படி, சம்பவங்கள் குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்ய வேண்டும், குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு சிறைத்தண்டனை, வெளியேற்றப்படுதல் மற்றும் பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்ட நஷ்ட ஈடு செலுத்துதல் ஆகியவை அடங்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு புதிதாக இணைத்துகொள்ளும் மாணவர்களை துன்புறுத்துவதில் ஈடுபட மாட்டோம் என அனைத்து மாணவர்களும் எழுத்து மூலம் உறுதியளிக்க வேண்டும் என்பது மேலதிக நிபந்தனையாக முன்வைக்கப்பட்டுள்ளது. (அ)

## மேலதிக வரிச் சட்டமூலம் அரசமைப்புக்கு முரணல்ல

### உயர் நீதிமன்றம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

மேலதிக வரிச் சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது அல்ல என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அதற்கமைய பாராளுமன்றில் சாதாரண பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்றமுடியுமென சபாநாயகரிடம் உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின்போது பிரதிச் சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இதனைச் சபையில் தெரிவித்தார்.

அவைத் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தனவினால் கடந்த மாதம் மேலதிக வரிச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

2000 மில்லியன் ரூபாய்க்கு அதிகமாக வரி அறவிடக்கூடிய வருமானத்தை ஈட்டும் நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு 25 சதவீத மேலதிக வரியை அறவிட அரசாங்கம் தீர்மானித்தது.

அதன்படி ஒரு தடவை மாத்திரம் அறிவிடப்படும் 25 சதவீத மேலதிக வரி தொடர்பான குறித்த சட்டமூலத்துக்கு அண்மையில் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

இதனை அடுத்து குறித்த சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது என உத்தரவிடக் கோரி எதிர்க்கட்சிகள் உயர் நீதிமன்றத்தை நாடியிருந்தன.

அந்தவகையில் மேலதிக வரிச் சட்டமூலத்தில் 13 நிதியங்கள் உள்ளடக்கப்படாத வகையில் திருத்தம் செய்யப்படும் என சட்டமா அதிபர் நீதிமன்றில் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரசியல் கைதிகளை விடுவிக்க கூட்டமைப்பு ஜனாதிபதியிடம் உத்தரவாதம் பெறவேண்டும்

## அருட்தந்தை மா.சக்திவேல் கோரிக்கை



கொழும்பு, மார்ச் 23

**நீண்ட காலம் சிறையில் வாடும் அரசியல் கைதிகளை அடுத்த பேச்சுக்கு முன்னர் விடுவிப்பதற்கான உத்தரவை நடக்கவிருக்கும் ஜனாதிபதிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் பெற்றுக்கொள்ளவேண்டும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப் பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்தார்.**

நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு இம் மாதம் 25ஆம் திகதி ஜனாதிபதியின் நேரப்படி நடைபெறவுள்ளது.

ஜோதிடர்களின் நல்ல நேரக் கணிப்பின்படி ஜனாதிபதியும், பிரதமரும், அமைச்சர்களும் பதவிப்பிரமாணம் செய்தும் அது அவர்களுக்கு நல்ல நேரமாக அமையவில்லை என்பதையே மக்கள் முகம் கொடுக்கும் பொருளாதார பிரச்னைகள், அரசு முகங்கொடுக்கும் சிக்கல்கள் வெளிப்படுத்துகின்றன.

இந்நிலையில் ஜனாதிபதியோடு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நடத்தும் பேச்சுவார்த்தை தமிழ் மக்களை அரசியல் சிக்கல்களுக்கு இட்டுச் செல்லக்கூடாது.

இச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மட்டும் சந்திப்புக்கு அழைப்பது இரு தரப்பினருக்கும் இடையில் அரசியல் உறவை வளர்த்துக் கொள்ளவா? அல்லது நல்லாட்சி காலமெனக் கூறப்பட்ட மைத்திரி-ரணில் ஆட்சிக் காலம் போன்று கட்சியிலிருந்து ஆதரவைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது தொடர்பில் தெரியவில்லை.

ஜனாதிபதியின் அழைப்பில் உள்நோக்கம் ஓரளவிற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தெரிந்திருக்கும் என நம்பலாம். அதன் காரணமாகவே வடக்கு-கிழக்கின் தமிழ்க் கட்சிகளோடு உரையாடாது ஜனாதிபதியைச் சந்திக்கச் செல்கின்றனர்.

தமிழர்களின் அரசியல் பிரச்னை தொடர்பான கலந்துரையாடல் எனில் அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு மட்டும் ஏன் பேச்சுவார்த்தையில் ஈடுபட அழைக்கவேண்டும்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தனித்து ஏன் செல்ல வேண்டும்? பேச்சுவார்த்தை என்பது கடந்த கால அனுபவங்களோடு கூட்டுத்தன்மை கொண்டதாக அமையவேண்டும்.

தற்போது தமிழர்கள் புலம்பெயர் நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். தமிழர் தாயகத்தின் அரசியலை முன் நகர்த்துவதற்காக பல்வேறு செயற்பாடுகளைச் செய்துவரும் நிலையில் அவர்களுடைய ஆலோசனையும் பெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் ரீதியான பிரச்னையைக் கதைப்பதற்குச் செல்லவேண்டும்.

இந்தப் பேச்சு வார்த்தையை மையப்படுத்தி நடக்கவிருப்பதாகக் கூறப்படும் மாகாணசபைத் தேர்தலில் அரசியல் லாபம் தேடும் முயற்சியாகவும் இது அமைந்து விடக்கூடாது. இந்த நோக்கில் மக்களைத் திசை திருப்புவது என்பது அழிவிற்கே வழிவகுக்கும்.

நலமான பேச்சுவார்த்தைக்கான அடித்தளமாகவும் நல்லெண்ணத்தின் அடையாளமாகவும் நீண்ட காலம் சிறையில் வாடும் அரசியல் கைதிகளை அடுத்த பேச்சுவார்த்தைக்கு முன்னர் விடுவிப்பதற்கான உத்தரவை நடக்கவிருக்கும் பேச்சுவார்த்தையில் பெற்றுக் கொள்ளப்படவேண்டும்.

அத்தோடு புத்தர் சிலைகளை ஆக்கிரமிப்பின் சின்னமாகத் தமிழர் தாயகத்தில் பல வந்தமாக வைப்பதைத் தடுத்து நிறுத்தவும் உத்தரவிடுமாறு கோரவேண்டும்.

மேலும் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தை அயலக மற்றும் வல்லரசுகளின் அரசியல் தேவைகளை மட்டும் நிறைவேற்றும் ஒன்றுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது நலன் சார்ந்து கைக்கூலிகளாக செயற்படக்கூடாது என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்-என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

## மதுபான போத்தல்களில் இனி பாதுகாப்பு ஸ்ரிக்கர்!

கொழும்பு, மார்ச் 23

தேசிய மதுபான போத்தல்களில் பாதுகாப்பு ஸ்ரிக்கர்கள் ஒட்டுவது எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக இலங்கை மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சாராயம் மற்றும் பியர் மதுபானப் போத்தல்களில் இந்த ஸ்ரிக்கர் ஒட்டும் நடவடிக்கைகள் கடந்த ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது என மதுவரி திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் கபில குமாரசிங்க கூறினார்.

ஸ்ரிக்கர்கள் அச்சடிக்கப்படுவதில் ஏற்பட்ட தொழிற்நுட்பக் கோளாறுகள் காரணமாக அந்த திட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

பாதுகாப்பு ஸ்ரிக்கர்கள் ஒட்ட முடியாத தேசிய மதுபானப் போத்தல்களில் டிஜிற்றல் அடையாளத்தை பதிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது எனவும் குமாரசிங்க மேலும் தெரிவித்தார். (அ)

## போலி விஸாவில் இத்தாலி செல்ல முயன்ற நபர் கைது

கொழும்பு, மார்ச் 23

போலியாக தயாரிக்கப்பட்ட இத்தாலி நாட்டின் வதிவிட விசாவை பயன்படுத்தி, துருக்கியின் இஸ்தன்புல் நகர் ஊடாக இத்தாலிக்கு செல்ல முயற்சித்த இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தேச எல்லை கட்டமைப்புப் பிரிவின் அதிகாரிகள் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

புத்தளத்தை சேர்ந்த 58 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

விமானத்தில் ஏறுவதற்காக சந்தேக நபர் சமர்ப்பித்த இத்தாலி வதிவிட விஸாவை பரிசோதித்த விமான சேவை அதிகாரிகள், அது தொடர்பில் ஏற்பட்ட சந்தேகத்தை அடுத்து, கடவுச்சீட்டை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளின் பார்வைக்கு அனுப்பியுள்ளனர்.

திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட பரிசோதனையில் அந்த விஸா அனுமதி போலியானது என தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர் சில காலம் இத்தாலியில் சாரதியாக தொழில் புரிந்து வந்தவர் எனவும் அவரது மனைவி, பிள்ளைகள் இத்தாலியில் வசிப்பதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நீண்டகாலத்துக்கு முன்னர் இலங்கை திரும்பிய இந்த நபரின் இத்தாலி வதிவிட விஸா அனுமதி காலாவதியாகியுள்ளது. இதன் காரணமாக சந்தேக நபர் போலியான இத்தாலி வதிவிட விஸாவை தயாரித்துள்ளார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் கைது செய்த சந்தேக நபரை மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலையத்தின் குற்றவியல் விசாரணை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர். (அ)

## இன்றைய சர்வகட்சி மாநாட்டை முன்னணியும் புறக்கணிக்கிறது

யாழ்ப்பாணம், மார்ச் 23

இன்று புதன்கிழமை ஜனாதிபதி கோட்டாபய தலைமையில் நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டை புறக்கணிப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அறிவித்துள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் விடுத்துள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்தார்.

அந்த அறிக்கை வருமாறு:

தமிழர் தாயகத்தில் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பைத் திட்டமிட்டுத் தீவிரமாகத் தொடர்ந்து கொண்டும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி வழங்கும் சிந்தனை அறவேயின்றியும் நாட்டைப் பொருளாதார ரீதியாக அதலபாதாளத்துக்குக் கொண்டு சென்றும் மக்களையும் சர்வதேசத்தையும் எதிர்கொள்ள முடியாது சிக்கித் திணறும் ஜனாதிபதி கோட்டாபய, தான் எதிர்கொள்ளும் நெருக்கடிகளைத் திசைதிருப்புவதற்காகவும் அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும் நாளைய தினம் (இன்று) நடத்தும் அரசியல் நாடகமான சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்டு ஜனாதிபதியைக் காப்பாற்றவோ அவருக்கு உயிர் கொடுக்கவோ விரும்பாத காரணத்தால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதியின் அழைப்பை நிராகரித்துச் சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணிப்பது என்ற முடிவை இனம் சார்ந்து எடுத்துள்ளது-என்றுள்ளது. (அ)

## சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்துவதற்கு விசேட குழு?

கொழும்பு, மார்ச் 23

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக விசேட குழுவொன்றை நியமிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இது தொடர்பிலான யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார் என்பதுடன் அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்த விசேட தொழில்நுட்பக் குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (அ)

# சிலிண்டரினால் எவருமே என்னை அடிக்கவில்லை!

## இராஜாங்க அமைச்சர் மறுப்பு



கொழும்பு, மார்ச் 23

கேகாலை ரஞ்வல பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை பயணித்துக் கொண்டிருந்தபோது சிலர் எரிவாயு சிலிண்டரால் என்னைத் தாக்கியதாக வெளியான செய்தியில் உண்மையில்லை என இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் மறுத்துள்ளார்.

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் கேகாலை ரஞ்வல பிரதேசத்தில் இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் பயணித்த வாகனத்தின் மீது சிலிண்டரைக் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும் அவ்வாறு தன் மீது தாக்குதல் நடத்தப்படவில்லையென அவர் கூறியுள்ளார்.

இது குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், கொழும்பு கண்டி பிரதான வீதியில் கேகாலை ரஞ்வல பிரதேசத்தில் உள்ள எரிவாயு சிலிண்டர் கடைக்கு முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அந்த பகுதியில் நான் பயணித்த வாகனத்தின் மீது சிலர் எரிவாயு சிலிண்டரால் தாக்கியதாக இணையத்தில் பொய்யான தகவல் பரவி வருகின்றது. உண்மையில் இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. அப்படி பயணிக்கும்போது எரிவாயு சிலிண்டரில் அடிபட்டிருந்தால் வாகனம் சேதமடைந்திருக்கும்.

இல்லை என்றால், குறைந்தபட்சம் ஒரு காணொளியாவது இருந்திருக்கவேண்டும். இந்த பொய்யான தகவலை வெளியிட்டமைக்கு எதிராக நாம் ஏற்கனவே சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேன் -என்றார். (அ)

# இலங்கையின் பொருளாதார நெருக்கடி; இரு மடங்கு அதிகரிக்கும் விலைவாசி!

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், ஒரு பவுன் தங்கத்தின் விலை ஒரு லட்சத்து 61 ஆயிரம் ரூபா வரை அதிகரித்துள்ளது.

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக தங்கத்தின் விலை இவ்வாறு சடுதியாக அதிகரித்துள்ளது. இதற்கு முன்னரான சந்தர்ப்பத்தில், இலங்கையில் தங்கத்தின் விலை அதிக பட்சமாக ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபாவிற்கு சென்றதாக கொழும்பு - செட்டியார் தெரு தங்காபரண வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில், பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான விலைகள் மற்றும் கட்டணங்கள் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்து வருகின்றன.

சமையல் எரிவாயு, எரிபொருள், அத்தியாவசிய பொருட்கள், பஸ் கட்டணங்கள், முச்சக்கரவண்டி கட்டணங்கள் என அனைத்து விலைகள் மற்றும் கட்டணங்களும் இன்று வரை நாளாந்தம் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இலங்கையில் அமெரிக்க டொலரை நெகிழ்வு தன்மையுடன் பேணுவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்திருந்தது.

இதையடுத்து, 203 ரூபாவாக காணப்பட்ட இலங்கை ரூபாவிற்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதி, இன்று 280 ரூபா வரை அதிகரித்துள்ளது. டொலரின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள பாரிய வீழ்ச்சியானது, இலங்கையின் பொருளாதாரத்திற்கு இன்று வரை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான நிலையில், இன்று தங்கத்தின் விலை படிப்படியாக அதிகரித்து, அதிவுயர் விலையை எட்டியுள்ளது. உலக சந்தையில் தங்கத்தின் விலை வீழ்ச்சி அடைந்தாலும், டொலரின் தாக்கம் காரணமாக இலங்கையில் தங்கத்தின் விலையில் அதிகரிப்பு ஏற்படுவதாக செட்டியார் தெரு தங்காபரண வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில், தங்காபரண விற்பனை குறித்து பிபிசி தமிழ், கொழும்பு செட்டியார் தெரு பகுதியில் கள ஆய்வொன்றை மேற்கொண்டது. இதன்படி, இலங்கையின் பிரதான தங்காபரண விற்பனை பிரதேசமாக விளங்கும் கொழும்பு - செட்டியார் தெரு பகுதி, வழமைக்கு மாறாக வெறிச்சோடி காணப்படுகின்றது

பெரும்பாலான வர்த்தக நிலையங்களில் வாடிக்கையாளர்கள் முழுமையாகவே இல்லாத நிலைமையும், ஏனைய சில வர்த்தக நிலையங்களில் குறைந்தளவிலான வாடிக்கையாளர்களும் வருகைத் தந்திருந்ததை காண முடிந்தது.

இலங்கையின் இதற்கு முன்னரான காலத்தில் சேமிப்பிற்காக தங்கத்தை கொள்வனவு செய்த மக்கள், இன்று திருமணம் போன்ற அத்தியாவசிய நிகழ்வுகளுக்காக மாத்திரமே தங்கத்தை கொள்வனவு செய்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான பின்னணியில், தங்கத்தின் விலை அதிகரிப்பு குறித்து, அகில இலங்கை தங்காபரண விற்பனையாளர்கள் சங்கத்தின் பொருளாளர் ஆர்.பாலசுப்ரமணியம் கருத்து தெரிவித்தார்.

"தங்கத்தின் நிலைமை நாளுக்கு நான் கூடிக் கொண்டே தான் செல்கின்றது. இலங்கையை பொறுத்த வரையில், இலங்கையின் பொருளாதார நிலை தான் தங்கத்தின் பாதிப்பாக இருக்கின்றது. இலங்கையில் இன்று வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதியின் அளவிற்கு தான் தங்கத்தின் விலையும் இருக்கின்றது. ஆகவே ஒவ்வொரு நாளும் நாணய பெறுமதி கூடிக் கொண்டு போகும் பொழுது, தங்கத்தின் விலையும் கூடிக் கொண்டே தான் போய் கொண்டிருக் கின்றது.

இலங்கையை பொறுத்த வரையில் பொருளாதாரம் ஒரு ஸ்திர நிலைக்கு வந்தால், தங்க விலை குறையலாம். இந்த தங்க விலை ஏற்றத்தால், இன்று பெரும் பகுதியான தங்க வியாபாரத்துடன் சம்பந்தப்பட்ட அனைவரும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றார்கள்.

அவர்களுக்கு என்ன வகையில், என்ன ஆறுதல் சொல்வது என்றே தெரியவில்லை. எல்லாவற்றுக்குமே இலங்கையின் பொருளாதாரம் தான் காரணம் என்று உறுதியாக கூறலாம். இந்த நிலையிலிருந்து மாறுவதற்கு நாம் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கின்றோம் எமது சங்கத்தின் மூலம்.

இன்று வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் அனைவருமே தங்கத்தை தான் கொண்டு வருகின்றார்கள். யாருமே டொலரை கொண்டு வரவில்லை. எல்லாருமே தங்கத்தை தான் கொண்டு வருகின்றார்கள். அவ்வாறு அவர்கள் கொண்டு வரும் தங்கம், ஒரு சிறு உந்துக் கோளாக இருக்கின்றது. ஆகவே வெளிநாட்டி லுள்ளவர்களிடம் நாங்கள் கேட்டுக் கொள்வது என்னவென்றால், வரும் பொழுது நீங்கள் தங்கத்தை கொண்டு வாருங்கள். எங்களுடைய தேவையை சிறிதளவாவது குறைத்துக் கொள்ளுங்கள்" என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த ஆண்டு இதே காலப் பகுதியில் 80 ஆயிரம் ரூபாவாக காணப்பட்ட தங்கம், தற்போது இரு மடங்காக அதிகரித்து ஒரு லட்சத்து 61 ஆயிரம் ரூபாவாக காணப்படுகின்றது என அவர் குறிப்பிடுகின்றார். இலங்கையில் நடைபெறும் திருமண வைபவ நிகழ்வுகளுக்கு மட்டுமே வாடிக்கையாளர்கள் தங்கத்தை கொள்வனவு செய்து வருவதாக அகில இலங்கை தங்காபரண விற்பனையாளர்கள் சங்கத்தின் பொருளாளர் ஆர். பாலசுப்ரமணியம் தெரிவிக்கின்றார்.

திருமண நிகழ்வுகளை தவிர, வேறு எந்தவொரு தேவைகளுக்கும் இன்று தங்கத்தை கொள்வனவு செய்ய வாடிக்கையாளர்கள் முன்வருவதில்லை என கூறும் அவர், இந்த நிலைமை தொடருமாக இருந்தால் இந்த தொழில்துறை எதிர்காலத்தை பெரிதும் பாதிப்புக்களை எதிர்கொள்ளும் என அவர் குறிப்பிடுகின்றார்.

இதேவேளை, தங்கம் சார்ந்த தொழிலில் ஈடுபடும் செட்டியார் தெரு பகுதியைச் சேர்ந்த ஸ்ரீகாந்த், பிபிசி தமிழுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

"தங்கத்தை சார்ந்து இருக்கிற எங்களுக்கு தங்க வியாபாரம் நடந்தால் தான், எங்கட வியாபாரம் நடக்கும் என்ற ஒரு கட்டாயம் இருக்கிறது. அந்த சந்தர்ப்பத்தில தங்க நுகர்வோர் தங்கத்தை குறைவாக கொள்வனவு செய்வதால், அதன் பாதிப்பு பெரியளவில் எங்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கையின் உற்பத்தியாகக்கூடிய இயற்கையாக கிடைக்கக்கூடிய இரத்தினக்கற்களாக இருந்தாலும் சரி, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யக் கூடிய கற்களாக இருந்தாலும் சரி அந்த வியாபாரத்தில் பெரியளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றோம்.

**போன வருசம் 80,000 - 85000 ரூபா அளவில்தான் தங்கத்தை வாங்கினோம். இப்போ 1.61 லட்சம் ரூபாய் என்கின்ற நேரம் ரொம்பவே பெரிய பாதிப்பா இருக்கு. காரணம் எங்களுக்கு இப்ப இருக்க பொருளாதார பிரச்னையில அவ்வளவு கொடுத்து வாங்க முடியுமா தெரிய இல்ல. கட்டாய தேவை இருக்குற நாங்க வந்திருக்கோம். எங்களுக்கு திருமணம் எல்லாம் இருக்குற நேரம் கட்டாயம் நகை ஒன்று வாங்கனும்.**





தங்கத்தின் விலை அதிகமானதால பெரியளவுல பாதிக்கப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்யும் போது, அதற்கான பணத்தை நாங்க டொலரில் தான் செலுத்துகிறோம். 240, 250 ரூபாவிற்கு காணப்பட்ட டொலரின் பெறுமதி, இன்று கறுப்பு சந்தையில் 310 ரூபா வரை போய் கொண்டிகிறது.

அந்த ரீதியில பார்க்கும் போது, நாங்க டொலர்ல செலுத்தும் போது, முன்னரை விடவும் 25 வீதம் அதிகமாக தான் இருக்கிறது. இதை எங்க நுகர்வோருக்கு அதிக விலையில் விற் கும் போது, கற்களை தங்கத் தில் பதிக்கலாமா வேண்டாமா என யோசிக்கின்றார்கள். கற்களுக் கும் ஒரு தொகை செலவிடப்படும் என நுகர்வோர் யோசிப்பதால் எங்கள் வியாபாரம் பாதிக்கப்படுகிறது" என ஸ்ரீகாந்த் தெரிவித்தார்.

தங்க நகை வாங்குது தற்போது பெரியதொரு கனவாகி விட்டது என தங்க நகை கொள்வனவுக்காக வருகைத் தந்த வாடிக்கையாளரான சகுந்தலா தெரிவித்தார்.

"போன வருசம் வாங்குற நேரம் சாதா ரணமா 80,000 - 85000 ரூபா கிட்டதான் வாங்கினோம். இப்போ 1.61 லட்சம் ரூபாய் என்கின்ற நேரம் ரொம்பவே பெரிய பாதிப்பா இருக்கு. காரணம் எங்களுக்கு இப்ப இருக்க பொருளாதார பிரச்னையில அவ்வளவு கொடுத்து வாங்க முடியுமா தெரிய இல்ல. கட்டாய தேவை இருக்குற நாங்க வந்திருக்கோம். எங்களுக்கு திருமணம் எல்லாம் இருக்குற நேரம் கட்டாயம் நகை ஒன்று வாங்கனும்.

ஒரு பவுனை விட்டு, கால் பவுன் கூட வாங்க முடியாத நிலைமை இருக்கு. காரணம் இவ்வளவு விலை கூடி போனதால. இது எல்லாம் குறைச்சா அரசாங்கத்திற்கு பெரிய உதவியா போகும். முன்ன நாங்க கால் பவுனை வாங்குறதா இருந்தால் 20 - 25000 ரூபாவிற்கு வாங்கலாம். போன வருசம் வாங்கினோம். இப்போ இவ்வளவு பெரிய ஏற்றத்துக்கு வந்ததை ஏற்றுக்கொள்ளவே ஏலாது.

ஒரு நேர சாப்பாட்டுக்கே கஷ்டப்படுற நேரம், நகைய வாங்கி வச்சிக்க ஏலாது. தங்க நகை வாங்குவது இப்போது எங்கள போன்றவர்களுக்கு பெரிய கனவு. யோசிக்க வேண்டிய விசியம்." என வர்த்தக நிலையத்திற்கு வருகைத் தந்த வாடிக்கையாளரான இராமையா சகுந்தலா தெரிவித்தார். ■

**உக்ரைனில் ரஷ்யாவின் விமானத்தாக்குதல், எறிகணைத் தாக்குதல் போன்றவற்றால் கொல்லப்பட்ட 109 குழந்தைகளின் நினைவாக, அஞ்சலி செலுத்தும் வகையில் குழந்தைகள் பாவித்த தொட்டில் வண்டிகளைப் பிள்ளைகளின் சமாதி போலப் பொது இடமான லிவில் நகரமண்டபத்திக்கு முன்னால் சென்ற வாரம் வரிசையாக நிறுத்தி வைத்திருந்தபோது, பலரின் மனதையும் உருகவைத்துக் கண்களை நனைய வைத்தது.**



குரு அரவிந்தன்

# உக்ரைன் மீது ரஷ்யாவின் ஹைப்பர்சோனிக் தாக்குதல்

துடுப்பாட்டத்தில் ஓட்டங்களை எண்ணுவது போல, ரஷ்ய - உக்ரைன் யுத்தத்தில் நாட்களை எண்ண வேண்டிய துர்ப்பாக்கிய நிலை எமக்கு ஏற்பட்டிருக்கின்றது. சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் போது, கனடாவில் அந்தந்த நாட்டு ரசிகர்கள் தங்கள் நாட்டுக் கொடிகளைத் தங்கள் வண்டிகளில் பறக்கவிடுவது சாதாரண நிகழ்வாக இருக்கும். ஆனால் இம்முறை உக்ரைன் கொடிகளைப் பறக்க விட்டபடி செல்லும் பல வண்டிகளை வீதிகளில் காணமுடிகின்றது.

இன்றுடன் யுத்தம் ஆரம்பித்து 28 நாட்களாகிவிட்டன. ரஷ்யா தனது ஆயுதப் பலத்தை மேற்கு நாடுகளுக்குக் காட்டுவதற்காக 18 ஆம் திகதி பரிட்சார்த்தமாக உக்ரைனில் மேற்கே உள்ள டெல்யாரின் என்ற கிராமத்தில் இருந்த இராணுவ ஆயுதக் களஞ்சியத்தை 'ஹைப்பர்சோனிக் ஏவுகணை' மூலம் தாக்கி அழித்திருக்கின்றது. இந்த ஏவுகணை ஒலியைவிட 5 மடங்கு வேகம் கொண்டதால், இந்த ஏவுகணையைத் தாக்கி அழிப்பது கடினமானது. அமெரிக்காவிடம் தற்போது இருக்கும் பாதுகாப்பு ராடர்களால் இதைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கலாம் என்று ஆய்வாளர் கருதுகின்றனர். இது போன்ற ஏவுகணைத் தாக்குதலில் இருந்து பாதுகாக்கக்கூடிய இரும்புக் கவசங்கள் கொண்ட 3 கப்பல்கள் அமெரிக்காவிடம் இருந்தாலும், இன்னும் அவை வெள்ளோட்டம் விடப்படவில்லை.

இத்தகைய ஏவுகணைகளில் அணு வாயுதம் இணைக்கப்பட்டால், தடுத்து அழிக்க முடியாத நிலை ஏற்படலாம். சென்ற டிசெம்பர் மாதம் தங்களிடம் இத்தகைய ஆயுதங்கள் இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்திருந்தார். அது வெறும் வாய் வார்த்தை அல்ல என்பதைச் செய்கையிலும் காட்டி இருக்கின்றார். முதலாவது ஏவுகணைத் தாக்குதலை நம்பாதவர்களுக்காக இரண்டாவது தடவையாகவும் கருங்கடலில் உள்ள கப்பலில் இருந்து அதிவேக ஹைப்பர்சோனிக் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி இருக்கிறார்கள். இத்தடவை உக்ரேனிய கவச வாகனங்களைப் பழுதுபார்க்கும் தொழிற்சாலை மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிகின்றது. உக்ரைனின் எரிபொருள் சேமிப்பு நிலையங்களையும் இத்தகைய ஏவுகணைகளைக் கொண்டு அழிக்கப்போவதாக ரஷ்யா குறிப்பிட்டிருக்கின்றது.

ரஷ்யாவின் உக்கிரமான தாக்குதலுக்கு உக்ரைனின் தலைநகரான கீவ், இரண்டாவது பெரிய நகரமான கார்கிவ், துறைமுக நகரமான மரியுபோல் ஆகியன உள்ளாகி இருக்கின்றன. எறிகணைத் தாக்குதலும், விமானத் தாக்குதலுமே இப்பகுதியில் அதிகமாக நடைபெறுகின்றன. இந்த மூன்று இடங்களும் ரஷ்யாவிடம் விழும் பட்சத்தில், உளரீதியாக உக்ரைன் மக்கள் வலு இழந்து விடுவார்கள். அதனால்தான் ரஷ்யா இந்த மூன்று இடங்களையும் குறிவைத்துத் தாக்குகின்றது. இதில் ரஷ்யா கவனமாகச் செயற்படாவிட்டால், ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி உலக நாடுகள் தலையை நுழைக்கக் காத்திருக்கின்றன என்பது ரஷ்யா அறிந்ததே! அப்படி நடந்தால், இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஒதுங்கியிருந்த அமெரிக்கா எப்படி உள்வாங்கப்பட்டதோ, அதேபோல இப்போது ஒதுங்கி இருக்கும் சீனா மறைமுகமாக ரஷ்யாவுக்கு உதவ முன்வரலாம். அப்படி ஒன்று நடக்கும் பட்சத்தில் அது உலக யுத்தமாக மாறிவிட வாய்ப்புண்டு.

உக்ரைனுடனான ரஷ்ய யுத்தம் காரணமாக உக்ரேன் மக்கள் அகதிகளாக்கப் பட்டிருக்கின்றனர். பொதுவாக யுத்தம் என்று வரும்போது இரண்டு பக்கத்திலும் மக்கள் அகதிகளாக்கப் படுவதுண்டு. ஆனால் இதுவரை ஒரு பக்கத்து மக்கள், அதாவது உக்ரைன் மக்கள் மட்டுமே அகதிகளாக்கப் பட்டிருக்கின்றனர். காரணம் உக்ரைன் இதுவரை ரஷ்யாவைத் தாக்கவில்லை. தற்பாதுகாப்பு யுத்தமே மேற்கொள்கிறார்கள். உக்ரைன் திருப்பித் தாக்கத் தொடங்கினால், அது உலக யுத்தமாக மாறிவிட வாய்ப்புண்டு.

அகதிகளாக்கப் பட்டவர்களில் இடம் பெயர்ந்த உக்ரைன் மக்களும், புலம் பெயர்ந்த உக்ரைன் மக்களும் இடம் பெறுவர். ஐ.நா.வின் புலம் பெயர்ந்தோர் அறிக்கையின் படி இதுவரை 30 இலட்சம் 20 ஆயிரம் உக்ரைன் மக்கள் அயல் நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து இருக்கிறார்கள். 6.5 மில்லியன் மக்கள் உக்ரைன் நாட்டுக்குள்ளேயே வெவ்வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து இருக்கிறார்கள். 12 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்து போவதற்கு முடியாமல் யுத்தம் நடைபெறும் பகுதிகளில் அகப்பட்டுத் தவிக்கிறார்கள். பாலங்களும், போக்கு வரத்து பாதைகளும் குண்டு வீசி அழிக்கப்பட்டதாலும், ஊரடங்குச் சட்டம் நடைமுறைப் படுத்தப் பட்டிருப்பதாலும் அப்பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேற முடியாமல் சிக்கித் தவிக்கிறார்கள்.

உக்ரைனில் ரஷ்யாவின் விமானத் தாக்குதல், எறிகணைத் தாக்குதல் போன்றவற்றால் கொல்லப்பட்ட 109 குழந்தைகளின் நினைவாக, அஞ்சலி செலுத்தும் வகையில் குழந்தைகள் பாவித்த தொட்டில் வண்டிகளைப் பிள்ளைகளின் சமாதி போலப் பொது இடமான லிவில் நகர மண்டபத்திக்கு முன்னால் சென்ற வாரம் வரிசையாக நிறுத்தி வைத்திருந்தபோது, பலரின் மனதையும் உருகவைத்துக் கண்களை நனைய வைத்தது. ஒன்றுமே அறியா அப்பாவிக் குழந்தைகள் இலக்கு வைக்கப்பட்டுக் கொல்லப்பட்டபோது, யாராக இருந்தால் என்ன, அந்தப் பெற்றோரின் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பது ஒவ்வொரு பெற்றோரும் வலியோடு நினைத்துப் பார்த்திருப்பார்கள்.

எப்பொழுதுமே யுத்தம் என்று வந்துவிட்டால், இயலாமையின் வெளிப்பாடாய் பெண்களும், குழந்தைகளும் தான் மனநோயாளர்களான எதிரிகளால் முதலில் இரையாக்கப் படுகின்றார்கள். மக்களை உளரீதியாகப் பலவீனப் படுத்துவதுதான் இதன் முதல் நோக்கம். இது போன்ற ஒரு நிலைமை இலங்கைத் தமிழர்களுக்கும் யுத்தகாலத்தில் பல தடவை நடந்தது நினைவிருக்கலாம். கல்வியறிவூட்டும் புனிதமான கோயில்கள்தான் பாடசாலைகள் என்று தெரிந்தும், பாடசாலைகள் மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுச் சிறார்களைப் பலி எடுத்துவிட்டு, அதற்குப் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டதும் மக்கள் நினைவை விட்டு என்றென்றும் அகலப் போவதில்லை.

இதற்கிடையே ரஷ்ய சரக்கு விமானம் ஒன்று ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் அவசரமாகத் தரை இறங்கி இருந்தது. உக்ரைன் விவகாரத்தில் ரஷ்ய விமானங்களுக்குத் தடைவிதித்திருந்த நிலையில், முன்னறிவிப்பு இல்லாமல் தரை இறக்கப்பட்டதால், திரும்பவும் புறப்பட்டுச் செல்வதற்கு வொல்காடினிபிர் நிறுவனத்திற்குச் சொந்தமான இந்த விமானத்திற்குத் தடைவிதிக்கப்பட்டதால், தற்போது விமானத் தரிப்பிடம் 'என்' இல் நிறுத்தப்பட்டிருக்கின்றது. இந்த விமானம் சீனாவில் இருந்து அலாஸ்கா அங்கரேய்ச் வழியாக கனடாவுக்கு வந்திருந்தது.

கனடாவின் கடற்படைக் கப்பலான எச்.எம்.சி.எஸ். கலிபாக்ஸ் சென்ற சனிக்கிழமை நேட்டோ அமைப்பின் வட அட்லாண்டிக் பால்டிக் பிரதேச பாதுகாப்புக்கு உதவுவதற்காக கலிபாக்ஸில் இருந்து புறப்பட்டுச் சென்றது. 1992 ஆம் ஆண்டு முதல் சேவையில் இருக்கும் இந்தக் கப்பல் 440 அடி நீளமானது. நீர்மூழ்கி எதிர்ப்பு, மற்றும் ஹெலிகொப்டர் வசதிகளைக் கொண்டது. 253 கடற்படை வீரர்களைக் கொண்ட இந்தக் கடற்படைக் கப்பல் புறப்பட்ட போது அவர்களின் குடும்பத்தினரும் அங்கு வந்து பிரியாவிடை கொடுத்து அனுப்பினார்கள். இந்தக் கப்பல் தொடர்ந்து அடுத்த ஆறு மாதங்களுக்கு அப்பகுதியில் கடமையில் ஈடுபடும். ஏற்கனவே அனுப்பப்பட்ட எச்.எம்.சி.எஸ். மொன்றியல் கடற்படைக் கப்பலுடன் இணைந்து கலிபாக்ஸ் செயற்படும். தமிழரான கனடா பாதுகாப்பு அமைச்சர் அனிட்டா ஆனந்த் அவர்கள் உத்தியோக பூர்வமாகக் கப்பலை வழியனுப்பி வைத்தார். அட்டவணை நிகழ்ச்சி நிரலின்படி இந்தக் கப்பல் அடுத்த வாரம் மத்திய கிழக்கிற்குச் செல்ல இருந்தது, ஆனால் தற்போதைய உக்ரைன் - ரஷ்யா அவசர நிலை காரணமாகப் பால்டிக் நோக்கித் திசை திருப்பப்பட்டது.

இதுவரை ரஷ்ய இராணுவ வீரர்கள் 14,400 பேர்வரை இந்த யுத்தத்தில் கொல்லப்பட்டிருப்பதாக உக்ரைன் அறிவித்திருக்கின்றது. இதைவிட 95 யுத்த விமானங்கள், 115 ஹெலிகொப்டர்கள், 1470 கனரகவாகனங்கள், 213 பீரங்கிகள் போன்றவையும் உக்ரைன் இராணுவ வீரர்களால் அழிக்கப்பட்டிருக்கின்றன. ரஷ்யாவின் பக்கத்து நாடான பெலாரஸ்ஸை ரஷ்யா தனது இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்துவதும் இப்போது அம்பலமாகி இருக்கின்றது. பெலாரஸின் ஹோாம் விமான நிலையத்தில் இருந்து உக்ரைன் நோக்கித் தாக்குதல் ட்ரோன் புறப்பட்டதை வீடியோ படங்கள் வெளிப்படுத்தியிருந்தன.

இந்த யுத்தம் சம்பந்தமாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கும் காணொளி மூலமாக ஆலோசனை நடத்தியிருந்தார்கள். நேட்டோ நாடுகளின் தலைவர்களையும், ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களையும் சந்திப்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பெல்ஜியம், மற்றும் போலாந்து ஆகிய நாடுகளுக்குச் செல்ல இருக்கின்றார்.

அவரைப் போலாந்தின் எல்லையில் உள்ள உக்ரைன் நாட்டுக்கும் வரும்படி முன்னாள் உக்ரைன் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்த யுத்தம் இப்போதைக்கு முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்க முடியவில்லை, வல்லரசுகளின் ஆயுதப் பலப்பரீட்சை யுத்தமாகவே இது இருக்கப்போகின்றது. ▪



# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

27. அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு விடையளிக்குக.

| பாடசாலை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| A | 245 |
| B | 740 |
| C | 390 |

(i) A பாடசாலை, C பாடசாலை ஆகிய இரண்டிலும் உள்ள மொத்த மாணவர் தொகை எவ்வளவு?

: ..........................................................


(ii) பாடசாலை B இல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையானது A, C ஆகிய பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கையை விட எவ்வளவு கூடுதலானது?

: ..........................................................

28. 621 தேங்காய்கள் சம எண்ணிக்கையுள்ள மூன்று குவியல்களாகப் பங்கிடப்பட்டன. ஒரு குவியலில் உள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

: ..........................................................

29. ஒரு குறித்த மாணவர் குழுவிடம் அவர்கள் விரும்பும் உணவு வகை பற்றிப் பெறப்பட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.




(i) மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்கள் விரும்பும் உணவு வகை யாது?

: ..........................................................

(ii) மாணவர்கள் சமமான எண்ணிக்கையில் விரும்பும் இரு உணவு வகைகளும் யாவை?

: ..........................................................

(iii) குறித்த குழுவில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: ..........................................................

- இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. 'தன்னிறைவான ஒரு நாட்டில் சூரியனும் சந்திரனும் இருக்கும் காலமெல்லாம் அறத்தைப் பாதுகாத்தவாறு மக்கள் யாவரும் ஒன்றுபட்டும்' என்னும் ஒட்டுமொத்தக் கருத்தை வெளிப்படுத்துவது இலங்கையின்.
(1) தேசியக் கொடி (2) தேசிய கீதம் (3) தேசிய இலச்சினை

31. ஒரு குறிப்பிட்ட காலத்திலன்றி வருடம் முழுவதும் பூக்கள் பூக்கும் தாவரங்களை **மாத்திரம்** கொண்ட விடை.
(1) தென்னை, வாழை, செவ்வரத்தை
(2) செவ்வரத்தை, இறப்பர், மா
(3) வேம்பு, தேக்கு, இறப்பர்

32. உடல், உள சுகத்திற்கான செயற்பாடுகளில் "மனவுறுதி" (திடசித்தம்) எத்தனையாம் படிமுறையாகும்?
(1) மூன்றாம் (2) நான்காம் (3) ஐந்தாம்

33. தேசியக் கொடியில் உள்ள செம்மஞ்சள் நிறப்பட்டி குறிப்பது.
(1) முஸ்லிம்களை (2) தமிழர்களை (3) சிங்களவர்களை

34. இலங்கையின் தேசியக் குறியீடுகளில் இரண்டு.
(1) காட்டுக் கோழியும், நிறைகுடமும்
(2) நீலோற்பலமும், நாகமரமும்
(3) தர்மச்சக்கரமும், அரச இலையும்

35. 'மிஹிந்து ஊர்வலம்' பின்வரும் எச்சமயத்தவர்களுடன் தொடர்புடையது?
(1) பௌத்தர்கள் (2) இந்துக்கள் (3) கிறிஸ்தவர்கள்

36. செவ்வெறும்புகளின் கூடு காணப்படத்தக்க ஒரு மரம்,
(1) தென்னை (2) கமுகு (3) வேம்பு

37. ஔடத பானம் தயாரிக்கப் பயன்படும் பூக்கள்,
(1) கறிவேப்பிலை, செவ்வரத்தை
(2) அகத்தி, சாத்தாவாரி
(3) பொன்னாவரை, வில்வம்

## விடைகள்

27. (i) 635
(ii) 105

28. 207

29. (i) தோசை
(ii) கடலை, இடியப்பம்
(iii) 45

30. (3) 31.(1) 32. (1) 33. (2) 34. (2) 35. (1) 36. (3) 37. (3)

## கல்வி tv CHANNEL-1

**23.03.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**23.03.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# வடக்கு, கிழக்கு இளைஞர்கள் திசை திருப்பப்படுகிறார்கள்!

*பின்னணியில் அரசு என்கிறார் கருணாகரம் எம். பி.*

**கொக்குவில், மார்ச் 23**

**2009ஆம் ஆண்டுக்கு பின்னர் வடக்கு, கிழக்கிலே இளைஞர்களை உரிமை, போராட்ட சிந்தனைகளில் இருந்து மாற்றுவதற்காகத் திட்டமிட்டு இளைஞர்களைத் திசை திருப்பும் கபடத்தனமான கைங்கரியத்தை அப்போது ஆட்சியிலிருந்த அரசு மேற்கொண்டது என மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு - கொக்குவில் பகலவன் விளையாட்டுக் கழக மைதான பெயர்ப்பலகைக் கான அடிக்கல் நாட்டு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், விளையாட்டுகள் மூலம் தான் எமது எதிர்கால சந்ததியை எதிர்கால இளைஞர்களைத் தப்பான வழியிலிருந்து ஒரு நல்ல வழிக்கு இட்டுச் செல்ல முடியும்.

ஏனெனில், எமது போராட்டம் முடிந்த பிறகு வடக்கு, கிழக்கிலே திட்டமிட்டு இளைஞர்களைத் திசை திருப்பும் கைங்கரியத்தை 2009இல் இருந்த 2015 வரை ஆட்சி செய்த மஹிந்த அரசு செய்திருந்தது. தமிழர்களின் உரிமைகளைப் பெறுவதற்காக அகிம்சை, ஆயுத ரீதியான போராட்டங்கள் நடைபெற்றன.

1969ஆம் ஆண்டு ரெலோ வால்தான் ஆயுதப் போராட்டத்திற்கான அத்திபாரம் இடப்பட்டது. 1983 ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தையொட்டி இந்த ஆயுதப் போராட்டம் வீறுகொண்டெழுந்தது.

2009 ஆம் ஆண்டு இந்த ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பிறகு எதிர்கால இளைஞர்களைப் போராட்ட சிந்தனைகளிலிருந்து மாற்றுவதற்காக சில கபடத்தனமான வேலைகள் வடக்கு, கிழக்கிலே நடைமுறைப் படுத்தப்பட்டன.

போதைப்பொருட்கள் வடக்கு, கிழக்கிலே தாராளமாக விற்கப்பட்ட ஒரு காலம் இருந்தது. அந்த நேரத்திலே அதனைத் தடுக்க வேண்டியவர்கள் கூட கண்டும் காணாமல் இருந்தார்கள். இந்த நாட்டிலே பாதிக்கப் பட்ட, பல இழப்புகளைச் சந்தித்த சமூகம் நாங்கள் கல்வி உட்பட பல துறைகளிலும் மேலோங்க வேண்டியவர்கள் நாங்கள் - என்றார். (ஐ)

## மகா கும்பாபிஷேகம்!

சம்மாந்துறை, மார்ச் 23

சம்மாந்துறை தமிழ்க்குறிச்சி ஸ்ரீ பத்ரகாளிஅம்பாள் ஆலயத்தின் புனராவர்த்தன மஹா கும்பாபிசேக குடமுழுக்கு பெருவிழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த மகா கும்பாபிசேக குடமுழுக்கு பெரும்சாந்தி பெருவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வாஸ்துசாந்தி கணபதிஹோமம் உள்ளிட்ட கிரியைகளுடன் ஆரம்பமாகியது.

எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நேற்று நடந்தது. இதைத் தொடர்ந்து இன்று புதன் கிழமை காலை 9.51மணி தொடக்கம் முற்பகல் 11.03 மணி வரையுள்ள சுபமுகூர்த்தவேளையில் மகாகும்பாபிசேகம் நடைபெறவுள்ளது. (ஐ)

## கல்லடி பாலத்தின் கீழ் ஆணின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு, மார்ச் 23

மட்டக்களப்பு கல்லடி பாலத்தின் கீழ் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே இந்த சடலம் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 35வயது மதிக்கத்தக்க ஆணின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை. அவர் தற்கொலை செய்துகொண்டாரா அல்லது அவரின் மரணத்தின் பின்னணியில் வேறு ஏதேனும் காரணங்கள் உள்ளனவா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பாலம் அமைக்க ஏற்பாடு



அம்பாறை, மார்ச் 23

சம்மாந்துறை, புளக் ஜே-வெஸ்ட் வண்டு வீதியில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசல், அன்வர் இஸ்மாயில் வித்தியாலயம் மற்றும் மையவாடி என்ப வற்றை ஊடறுத்துச் செல்லும் கைகாட்டி பிரதான வாய்க்காலுக்கு மேல் பாலம் அமைக்கும் வேலைத்திட்டம், கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு, அமைப்பின் மஷூரா குழுத் தலைவர் அல்ஹாபிழ் எம்.இர்பான் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தத் திட்டத்துக்கு வை.டபிள்யூ.எம்.ஏ. நிறுவனம் முழுமையான அனுசரணை வழங்கி வருவதாகவும் குறுகிய காலத்தினுள் மேம்பால நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப் படும் எனவும் ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபகத் தலைவர் ரஹ்மத் மன்சூர் தெரிவித்தார்.

இப்பிரதேச பொது மக்களின் நீண்ட காலத் தேவையாக இருந்து வருகின்ற பாலத்தை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுத்தமைக்காக ரஹ்மத் மன்சூருக்கு இதன்போது நன்றியும் பாராட்டும் தெரிவிக் கப்பட்டது. (அ)

# சட்டம், ஒழுங்கு தொடர்பில் ஆலையடிவேம்பில் கூட்டம்!



அக்கரைப்பற்று, மார்ச் 23

அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய மக்கள் தொடர்பாடல் பிரிவுக்கும் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

பிரதேச செயலாளர் வி. பபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் மக்கள் தொடர்பாடல் பிரிவின் பொறுப்பதிகாரி எஸ். எம். சதாத் பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர் ஆர். சுபாகர் கிராம உத்தியோகத்தர்களுக்கான நிருவாக உத்தியோகத்தர் பரிமளவாணி சில்வெஸ்டர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் மக்கள் தொடர்பாடல் பொலிஸ் பிரிவினர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

எதிர்காலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்படுவதற்கு பொலிஸ் திணைக்களத்துடன் ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் இணைந்து செயல்படுவது தொடர்பில் ஆராயும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

பிரதேச செயலாளர் தனது தலைமையுரையில் பொலிசாரும் பிரதேச செயலகமும் இணைந்து செயல்படவேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டினார்.

மேலும், சட்டம் ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்படுவதற்கு பிரதேச செயலகத்திற்கு பொலிஸ் திணைக்களம் வழங்க வேண்டிய ஒத்துழைப்பு தொடர்பாகவும் எடுத்துரைத்தார்.

இதேநேரம் இங்கு உரையாற்றிய மக்கள் தொடர்பாடல் பிரிவின் பொறுப்பதிகாரி எஸ். எம்.சதாத் தானும் தனது பிரிவும் பொலிஸ் நிலையமும் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்த எவ்வேளையிலும் தயாராக உள்ளதாகவும் பிரதேச செயலகத்திற்கும் கிராம உத்தியோகத்தர்களுக்கும் தம்மால் முடிந்த ஒத்துழைப்பை வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

இதன் முதல்கட்டமாக வாரம் இரு நாட்களில் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களின் பிரிவிற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரை கடமையில் அமர்த்தவும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் வாரம் இரண்டை தெரிவு செய்யவும் முடிவு செய்யப்பட்டது. (ஐ)

# கிழக்கில் பொலிஸ் பாதுகாப்புடன் சமையல் எரிவாயு விநியோகம்!

மட்டக்களப்பு, மார்ச் 23

நாடு முழுவதும் தட்டுப்பாடாக இருந்த லிற்றோ எரிவாயு சிலிண்டர்கள் பொலிஸாரின் பாதுகாப்புக்கு மத்தியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மக்களுக்கு சீராக வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மக்களுக்கு லிற்றோ எரிவாயு விநியோக நடவடிக்கை வாழைச்சேனை பொலிஸ் நிலையம் முன்பாக ஓட்டமாவடி வர்த்தக சங்கத் தலைவர் எம்.ஏ.சி.எம். நியாஸின் முயற்சியால் இடம் பெற்றது.

லிற்றோ எரிவாயு விநியோக மொத்த விற்பனை முகவர்களால் எடுத்து வரப்பட்டு சுமார் 180 க்கும் அதிகமான சிலிண்டர்கள் கடும் நெருக்கடிக்கு மத்தியில் வாழைச்சேனை, பேத்தாழை, கல்குடா, ஓட்டமாவடி, மீராவோடை, கறுவாக்கேணி உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்து வருகை தந்த பொது மக்கள் மற்றும் உணவக உரிமையாளர்களுக்கு பொலிஸாரின் மேற்பார்வையில் வழங்கப்பட்டது.

எரிவாயு கொள்வனவில் சிறுவர்கள், பெண்கள் அதிகளவாக வருகை தந்து பெற்றுச்சென்றதைக் காண முடிந்தது. (அ)





# உயிரியல், ரசாயன ஆயுத தாக்குதல் உக்ரைன் மீது நடத்த ரஷ்யா திட்டம்!



## ஜோ பைடன் குற்றச்சாட்டு

நியூயோர்க், மார்ச் 23

உக்ரைன் மீது உயிரியல் மற்றும் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தித் தாக்குதல் நடத்துவது குறித்து ரஷ்ய ஜனாதிபதி புடின் பரிசீலித்து வருவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

எனினும் தனது குற்றச்சாட்டுக்கான ஆதாரங்கள் எதையும் பைடன் வெளியிடவில்லை.

உக்ரைன் தலைநகர் கீய்வில் உயிரியல் மற்றும் இரசாயன ஆயுதங்கள் இருப்பதாக புடின் ஆதாரமின்றி குற்றஞ்சாட்டுவது உக்ரைன் மீது அவ்வாறான ஆயுதங்களை பிரயோகிப்பதற்கு முயற்சியாகவே கருத முடிகிறது எனவும் பைடன் குறிப்பிட்டார்.

இந்நிலையில் பைடனின் இந்தக் குற்றச்சாட்டு குறித்து வொஷிங்டனில் உள்ள ரஷ்ய தூதரகத்திடம் கேள்வி எழுப்பியபோதும் உடனடியாக பதிலளிக்கவில்லை என ரொய்ட்டர்ஸ் செய்தி முகாமை தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் 3 ஆவது வாரமாகத் தொடரும் நிலையில் ரஷ்யாவால் எந்த ஒரு பெரிய நகரத்தையும் கைப்பற்ற முடியவில்லை. உக்ரேனியப் படைகளின் கடும் எதிர்ப்பை ரஷ்யப் படைகள் சந்தித்து வருகின்றன. எனினும் பல நகரங்கள் மோதல் களால் ஸ்தம்பிதம் அடைந் துள்ளன. அத்துடன், ரஷ்யா வின் உக்கிர தாக்குதல்களால் பெருமளவு உக்ரைனின் நகரங் கள், குடியிருப்பு பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளன.

ரஷ்ய குண்டு வீச்சுகளால் இலட்சக்கணக்கான பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 2 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதற்கிடையே உக்ரைன் - கிழக்கு துறைமுக நகரமான மரியுபோல் ரஷ்யப் படைகளால் முற்றுகையிடப்பட்டுள்ள நிலையில் அங்குள்ள உக்ரேனிய படைகள் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு சரணடைய வேண்டும் என ரஷ்யா விதித்த நிபந்தனையை உக்ரைன் உடனடியாக நிராகரித்தது.

ரஷ்யப் படைகளிடம் எமது படைகள் சரணடைவது என்ற பேச்சுக்கே இடமில்லை என உக்ரைன் துணைப் பிரதம மந்திரி இரினா வெரேஷ்சுக் தெரிவித்தார்.

பெப்ரவரி 24 அன்று உக்ரைன் மீதான போரை ரஷ்யா தொடங்கியதில் இருந்து மரியுபோல் நகரம் கடுமையான தாக்குதல்களை சந்தித்து வருகிறது. இந்நகரில் உள்ள 4 இலட்சம் குடியிருப்பாளர்களில் பலர் உணவு, தண்ணீர் மற்றும் மின்சாரம் எதுவும் இல்லாமல் சிக்கியுள்ளனர். (அ)

# போலந்து செல்கிறார் அமெரிக்க ஜனாதிபதி

நியூயோர்க், மார்ச் 23

உக்ரைன் நெருக்கடி தீவிர மடைந்துவரும் நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை உக்ரைனுக்கு அண்மையில் உள்ள நெருங்கிய நட்பு நாடான போலந்துக்கு விஜயம் செய்கிறார்.

எனினும் இந்தப் பயணத்தின்போது உக்ரைனுக்கு விஜயம் செய்யும் திட்டம் ஏதும் இல்லை என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

போலந்து செல்லும் பைடன், தலைநகர் வார்சாவில் போலந்து ஜனாதிபதி ஆண்ட்ரெஜ் டுடாவை நேரில் சந்தித்து போர் நிலவரம் குறித்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் ஜென் சாகி வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நாளை பெல்ஜியம் செல்லும் ஜனாதிபதி பைடன், தலைநகர் பிரஸ்ஸல்ஸில் நேட்டோ தலைவர்கள், ஜி7 தலைவர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய தலைவர்களை சந்திக்கவுள்ளார்.

அவர்களுடன் ரஷ்யாவின் மீதான பொருளாதார தடைகள் மற்றும் ரஷ்யாவின் தாக்குதல்களால் இடம்பெயர்ந்த இலட்சக்கணக்கான உக்ரைன் மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் குறித்து பைடன் முக்கிய ஆலோசனை நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்களைத் தொடர்ந்து 25 ஆம் திகதி பைடன், போலந்து செல்கிறார். உக்ரைனில் ரஷ்ய தாக்குதலால் ஏற்பட்டுள்ள மனிதாபிமான நெருக்கடி குறித்து அந்த நாட்டு ஜனாதிபதியுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

உக்ரைனுக்கான உலக நாடுகளின் ஆதரவை நிரூபிக்கும் வகையில் இந்த சந்திப்பு அமையும் என என வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கிளாஸ்கோ நகர வீதியில் அணு ஆயுத வாகன அணி?

லண்டன், மார்ச் 23

அணு ஆயுதத் தாக்குதல்கள் பற்றி அதிகம் பேசப்படுகின்ற ஒரு காலம் மீண்டும் திரும்பியிருக்கிறது. கடந்த வெள்ளி இரவு அணு ஆயுதங்களைத் தாங்கிய நீண்ட இராணுவ வாகன அணி ஒன்று ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரைக் கடந்து சென்றுள்ளது என்ற தகவலை பிரிட்டிஷ் ஊடகங்கள் சில வெளியிட்டிருந்தன.

சுமார் ஆறு அணு ஆயுதங்கள் அந்த நீண்ட வாகன அணியில் பிரிட்டிஷ் றோயல் கடற்படையின் அணு ஆயுதக் களஞ்சியத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன என்ற உறுதி செய்யப்படாத தகவல்களை ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. ஆனால் பாதுகாப்பு அதிகாரிகள் எவரும் அதனை மறுக்கவில்லை. அணு வாயுதங்கள் இவ்வாறு இடம் நகர்த்தப்படுவது வழக்கமான ஒன்றுதான் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.



பிரிட்டனில் அணு ஆயுதங்கள் இடத்துக்கிடம் நகர்த்தப்படுவதைக் கண்காணித்து வருகின்ற நியூக்வோச் என்ற அணு ஆயுத எதிர்ப்புத் தொண்டு நிறுவனம் இராணுவ வாகன அணி ஆயுதங்களை ஏற்றிச் சென்றதை உறுதிப்படுத்தி அதன்ருவீற்றர் தளத்தில் படத்தை வெளியிட்டுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்புப் பெரும் போராக ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவலாம் என்ற அச்சம் அந்த நாடுகளில் காணப்படுகிறது. ரஷ்ய அதிபர் புடின் தனது நாட்டின் அணு ஆயுதங்களை அல்லது பேரழிவு ஆயுதங்களை இயக்குகின்ற படைப் பிரிவைத் தயார் நிலையில் இருக்குமாறு பணித்திருக்கிறார். அதனையடுத்து அணு ஆயுதப்போர்ப் பதற்றம் எழுந்துள்ளது.

அணு ஆயுதங்களை வைத்திருக்கின்ற பிரிட்டன் போன்ற நாடுகள் கிரெம்ளினுடன் மோதும் நிலைமை ஏற்பட்டால் அணு ஆயுதப் போர் தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிடும்.

ரஷ்யா - உக்ரைன் நெருக்கடி அணு ஆயுத மோதலாக விரிவடையக் கூடிய ஆபத்து இருக்கிறது என்று ஐ. நா. செயலாளர் நாயகம் அன்ரோனியோ குற்ற ரெஸ் அண்மையில் எச்சரித்திருந்தார்.

"ரஷ்யா அதன் அணு ஆயுதப்படைகளது உஷார் நிலையை உயர்த்தியிருப்பது மிகவும் பதற்றமூட்டும் ஒன்றாகும். நடக்காது என்று ஒரு காலத்தில் நாங்கள் நினைத்திருந்த அணு ஆயுதப் போர் இப்போது சாத்தியத்தின் விளிம்புக்கு வந்துள்ளது "- என்று அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார். (அ)

# மரியுபோலில் நடைபெறுவது மிகப்பெரிய போர்க் குற்றம்!

## ரஷ்யாவை கடுமையாக சாடும் ஐரோப்பிய ஒன்றியம்

பிரஸ்ஸல்ஸ், மார்ச் 23



உக்ரைனின் மரியுபோலில் நடைபெறுவது மிகப்பெரிய போர்க் குற்றமாகும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கைப் பிரிவின் தலைவர் ஜோசப் போரெல் தெரிவித்துள்ளார்.

மேலும், எல்லாவற்றையும் அழித்து, கண் மூடித்தனமாக அனைவரையும் ரஷ்ய படைகள் குண்டுவீசி கொன்று வருவதாகவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

உக்ரைனில் தொடர்ந்து தாக்குதல் நடத்தில் வரும் ரஷ்யா மீது இன்னும் கூடுதல் பொருளா தார தடைகள் விதிப்பது பற்றி 27 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் நேற்று முன்தினம் பிரஸ்ஸல்ஸில் ஒன்று கூடினர்.

இதன்போதே ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கைப் பிரிவின் தலைவர் ஜோசப் போரெல் இந்த கருத்தை வெளியிட்டார்.

மேலும், இந்த கூட்டத்தில் பேசிய லிதுவேனியா மற்றும் அயர்லாந்தின் வெளியுறவு அமைச்சர்கள், 'ஐரோப்பிய ஒன்றியம் ரஷ்யா மீதான, குறிப்பாக அதன் இலாபகரமான எரிசக்தி துறையை இலக்காகக் கொண்டு, பொருளாதாரத் தடைகளை அதிகரிக்க வேண்டும்' என்று தெரிவித்துள்ளனர்.

இதுதவிர, ஜேர்மனி வெளியுறவு அமைச்சர் அன்னாலெனா பாயர்பாக் கூறுகையில், 'மருத்துவமனைகள், திரையரங்குகள் உள்ளிட்ட பொதுமக்களின் உள்கட்டமைப்புகள் மீது ரஷ்யாவின் தாக்குதல் அதிகரித்து வருகிறது. என்னைப் பொறுத்தவரை இவை தெளிவான போர்க் குற்றங்களாகும்' என கூறினார். (அ)

# சீன விமானத்தில் பயணித்த எவரும் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பில்லை!

பீஜிங், மார்ச் 23

சீனாவில் விபத்துக்குள்ளான பயணிகள் விமானத்தில் பயணித்த எவரும் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குன்மிங்கில் இருந்து அந்நாட்டு உள்ளூர் நேரப்படி கடந்த திங்கள்கிழமை பிற்பகல் 1.10 மணிக்கு போயிங் 737 ரக விமானம் புறப்பட்டது.

குவாங்ஜோ விமான நிலையத்துக்கு பிற்பகல் 2.52 மணிக்கு செல்லவேண்டிய இந்த விமானம், உரிய நேரத்தில் வராததால் தேடுதல் பணி நடைபெற்றது.

அப்போது இந்த விமானம் ஹூஜோ நகரத்தில் உள்ள டெங்ஷியானில் உள்ள மலைப் பகுதியில் விழுந்து நொருங்கியமை கண்டறியப்பட்டது. இதனால் அப்பகுதியில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது.

விபத்து நிகழ்ந்த இடத்திலிருந்து விமானத்தின் உடைந்த பாகங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனினும், 18 மணி நேர தேடுதல் பணிகளுக்குப் பிறகும் இதுவரை காயங்களுடன் யாரும் மீட்கப்படவில்லை என்று சிசிரிவி எனப்படும் அந்நாட்டு செய்தி ஊடகம் தெரிவித்துள்ளது.

விபத்துக்குள்ளான சீன ஈஸ்டர்ன் எயார்லைன்ஸ் விமானத்தில் 123 பயணிகள், 9 விமான ஊழியர்கள் என மொத்தம் 132 பேர் இருந்தனர்.

விபத்து நடந்த இடத்துக்கு 23 தீயணைப்பு வாகனங்களில் 117 வீரர்கள் முதலில் அனுப்பப்பட்டதாகவும், பின்னர் பிற பகுதிகளில் இருந்து 538 தீயணைப்பு வீரர்கள் மீட்புப் பணிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விபத்துக்குள்ளான விமானத்தை அகற்றவும், விபத்துக்கான காரணத்தைக் கண்டறியவும், விமானப் பயணிகளின் குடும்பத்தினருக்கு உதவவும் 9 குழுக்களை சீன ஈஸ்டர்ன் எயார்லைன்ஸ் விமான நிறுவனம் அமைத்துள்ளது. (அ)

ஈழநாடு



## மகளிர் உலகக் கிண்ணம்:
# லேனிங் அதிரடி சதம் ஆஸி. அசத்தல் வெற்றி!

வெலிங்டன், மார்ச் 23

அணித் தலைவி லேனிங் குவித்த அதிரடி சதத்தால் தென்னாபிரிக்கா அணியை வீழ்த்தியது அவுஸ்திரேலிய அணி.

இதுவரை உலகக் கிண்ண போட்டியில் தோற்காத அணிகளான அவுஸ்திரேலியாவும் தென்னாபிரிக்காவும் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் மோதின.



வெலிங்டனில் நடைபெற்ற இரு பலம் பொருந்திய அணிகளுக்கு இடையிலான இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸி. அணி களத்தடுப்பைத் தெரிவ செய்தது.

துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்காவுக்கு லீயும் லாராவும் முதல் விக்கெட்டுக்காக 88 ஓட்டங்கள் சேர்த்தார்கள். லாரா 90, சூன் லுஸ் 52 ஓட்டங்கள் எடுத்தார்கள்.

கடைசிக்கட்டத்தில் அதிரடியாக விளையாடி மரிஸேன் 30 ஓட்டங்களும் டிரயோன் 17 ஓட்டங்களும் எடுத்தார்கள்.

தென்னாப்பிரிக்க அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 271 ஓட்டங்கள் எடுத்தது.

வலுவான இலக்கை துரத்தினர் ஆஸி. வீராங்கனைகள். அணித் தலைவி மெக் லேனிங்கை கடைசிவரை தென்னாபிரிக்க வீராங்கனைகளால் ஆட்டமிழக்கச் செய்ய முடியவில்லை. லேனிங் 130 பந்துகளில் ஒரு சிக்ஸர், 13 பௌண்ட்ரிகளுடன் 135 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார். அவுஸ்திரேலிய அணி, 45.2 ஓவர்களிலேயே 5 விக் கெட்கள் இழப்புக்கு 272 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய அணி, இதுவரை விளையாடிய 6 ஆட்டங்களிலும் வெற்றி பெற்று 12 புள்ளிகளுடன் புள்ளிகள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. தென்னாபிரிக்க அணி முதல்முறையாகத் தோல்வி கண்டு, 5 போட்டிகளில் 4 வெற்றிகளுடன் 8 புள்ளிகள் எடுத்து 2ஆம் இடத்தில் உள்ளது.

# 110 ஓட்டங்களால் பங்களாதேஷை வீழ்த்தியது இந்திய மகளிர் அணி!

ஹமில்டன், மார்ச் 23

பங்களாதேஷுக்கு எதிராக ஹமில்டன், சிடொன் பார்க் விளையாட்டரங்கில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போட்டியில் 110 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இந்தியா, மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் அரையிறுதி வாய்ப்பை சற்று அதிகரித்துள்ளது.

யஸ்திகா பாட்டியா குவித்த அரைச் சதம், ஸ்நேஹ் ரானா மற்றும் பூஜா வஸ்த்ராக்கர் ஆகியோரின் சகலதுறை ஆட்டங்கள் இந்தியாவின் வெற்றியை இலகுபடுத்தின.

இந்த வெற்றியுடன் மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் 3ஆவது வெற்றியை ஈட்டிய இந்தியா, அணிகள் நிலையில் 6 புள்ளிகளுடன் நிகர ஓட்ட வேக அடிப்படையில் 3ஆம் இடத்தில் இருக்கின்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த இந்தியா 50 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்மிருதி மந்தனா (30 ஓட்டங்கள்), ஷபாலி வெர்மா (42) ஆகிய இருவரும் 15 ஓவர்களில் 74 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர். ஆனால், அதே மொத்த எண்ணிக்கையில் இவர்கள் இருவரும் அணித் தலைவி மிதாலி ராஜும் (0) இழந்த போது இந்தியா ஆட்டம் கண்டது.

தொடர்ந்து ஹார்மன்ப்ரீத் கோர் (14) நான்காவதாக ஆட்டமிழந்தபோது இந்தியாவின் மொத்த எண்ணிக்கை 104 ஓட்டங்களாக இருந்தது.

எனினும் யஸ்திகா பாட்டியா (50), றிச்சா கோஷ் (26) ஆகிய இருவரும் 5ஆவது விக்கெட்டில் 54 ஓட்டங்களைப் பகிர்ந்து மொத்த




எண்ணிக்கைக்கு வலு சேர்த்தனர்.

தொடர்ந்து பூஜா வஸ்த்ராக்கர் (30 ஆ.இ.), ஸ்நேஹ் ரானா (27) ஆகிய இருவரும் திறமையாக துடுப்பெடுத்தாடிய இந்தியாவின் மொத்த எண்ணிக்கை 200 ஓட்டங்களைக் கடக்க உதவினர்.

பங்களாதேஷ் பந்துவீச்சில் ரிட்டு மோனி 37 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் நஹிதா அக்தர் 42 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

230 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 40.3 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 119 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது.

பங்களாதேஷின் 5ஆவது விக்கெட் 18ஆவது ஓவரில் வீழ்ந்தபோது அதன் மொத்த எண்ணிக்கை 35 ஓட்டங்களாக இருந்தது.

இந் நிலையில் ஜோடி சேர்ந்த லதா மொண்டால் (24), சல்மா காட்டுன் (32) ஆகிய இருவரும் சிறப்பாக துடுப்பெடுத்தாடி பங்களாதேஷுக்கு உற்சாகம் கொடுத்தனர். ஆனால் அவர்கள் இருவரும் 6ஆவது விக்கெட்டில் 40 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தபோது சல்மா காட்டுன் ஆட்டமிழக்க, பங்களாதேஷின் எதிர்பார்ப்பு தகர்ந்தது. இவர்கள் இருவரை விட முர்ஷிதா காட்டுன் (19), றிட்டு மொனி (16), ஜஹனாரா அலாம் (11 ஆ.இ) ஆகிய மூவரே 10 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர்.

இந்திய பந்துவீச்சில் ஸ்நேஹ் ரானா 30 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் ஜூலான் கோஸ்வாமி 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் பூஜா வஸ்தராக்கர் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.



# 13 ஆண்டு தோல்விக்கு பழிதீர்த்தது பாகிஸ்தான்!

ஹெமில்டன், சிடொன் பார்க் விளையாட்டரங்கில் திங்கட்கிழமை நடந்த போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளை 8 விக்கெட்களால் வீழ்த்திய பாகிஸ்தான், 2009க்குப் பின்னர் முதல் தடவையாக மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி ஒன்றில் வெற்றியீட்டியது.

13 வருடங்களுக்கு முன்னர் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மகளிர் உலகக் கிண்ண போட்டியிலேயே பாகிஸ்தான் கடைசியாக வெற்றிபெற்றிருந்தது.

இந்த வெற்றி மூலம் மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட்டில் பாகிஸ்தான் தொடர்ச்சியாக 18 போட்டிகளில் எதிர்நோக்கி வந்த தோல்வி முடிவுக்குவந்தது.

மழையால் நீண்ட நேரம் தாமதிக்கப்பட்டு 20 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்ட இந்தப் போட்டியில் நிடா டாரின் அதிசிறந்த பந்துவீச்சு உதவியுடன் மேற்கிந்தியத் தீவுகளை 89 ஓட்டங்களுக்கு பாகிஸ்தான் கட்டுப்படுத்தியது.

நிடா டார் 10 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களைக் கைப்பற்றி உலகக் கிண்ணப் போட்டி ஒன்றில் தனது அதிசிறந்த பந்துவீச்சுப் பெறுதியைப் பதிவு செய்தார்.

ஐந்து மணித்தியாலங்கள் தாமதித்து ஆரம்பமான இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட மேற்கிந்தியத் தீவுகள் 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது.

டியோண்ட்ரா டொட்டின் (27), அணித் தலைவி ஸ்டெபானி டெய்லர் (18), அஃபி ஃப்ளெச்சர் (12 ஆ.இ.) ஆகிய மூவரே இரட்டை இலக்க எண்ணிக்கைகளைப் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 18.5 ஓவர்களில் 2 விக்கெட்களை மாத்திரம் இழந்து 90 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

பங்களாதேஷிடம் தோல்வி அடைந்த போட்டியில் சதம் குவித்த சித்ரா ஆமின் இந்தப் போட்டியில் 8 ஓட்டங்களுடன் முதலாவதாக ஆட்டமிழந்தார்.

எனினும், இந்த வருட உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் முதல் தடவையாக விளையாடிய முனீபா அலி மிகத் திறமையாக துடுப்பெடுத்தாடி 37 ஓட்டங்களைப் பெற்ற பாகிஸ்தானை பலப்படுத்தினார். அணித் தலைவி பிஸ்மா மஹ்ரூப் 20 ஓட்டங்களுடனும் ஒமய்மா சொஹெய்ல் 22 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்து பாகிஸ்தானின் வெற்றியை உறுதிசெய்தனர்.

இந்தப் போட்டியில் தோல்வி அடைந்த மேற்கிந்தியத் தீவுகள் 6 புள்ளிகளுடன் தொடர்ந்தும் 3ஆம் இடத்தில் இருக்கின்றது.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக வியாழக்கிழமை நடைபெறவுள்ள போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றிபெற்றால் மாத்திரமே அரையிறுதியில் விளையாடும் வாய்ப்பைப் பெறும். தோல்வி அடைந்தால், இந்தியா, இங்கிலாந்து ஆகியவற்றின் போட்டி முடிவுகளிலேயே அதன் அரையிறுதி போட்டிக்கான வாய்ப்பு தீர்மானிக்கப்படும்.




# ஸ்மிருதி மந்தனா புதிய மைல்கல்!

இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் தொடக்க வீராங்கனை ஸ்மிருதி மந்தனா சர்வதேச கிரிக்கெட்டில் புதிய சாதனை படைத்துள்ளார்.

பங்களாதேஷுக்கு எதிரான போட்டியில் அவர் 17 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது 5000 ஓட்டங்களைப் பெற்றார். இந்தப் போட்டியில் ஸ்மிருதி மந்தனா மொத்தம் 30 ரன்கள் எடுத்தார். அவர் 51 பந்துகளில் 3 பௌண்ட்ரிகளுடன் 30 ஓட்டங்கள் எடுத்தார்.

ஸ்மிருதி மந்தனா ஒருநாள் போட்டியில் 2,717 ஓட்டங்களும் டெஸ்ட் கிரிக்கெட்டில் 326 ஓட்டங்களும் இருபது -20 போட்டியில் 1971 ஓட்டங்களும் எடுத்துள்ளார்.

இதன் மூலம் சர்வதேச மகளிர் கிரிக்கெட்டில் 5000 ஓட்டங்களை கடந்துள்ளார். இதற்கு முன் மிதாலி ராஜ் மற்றும் ஹர்மன்பிரீத் கவுர் ஆகியோர் இந்தியாவுக்காக இந்த சாதனையை படைத்துள்ளனர்.

# இந்தியாவின் நிதியுதவி கிடைத்தமை அதிர்ஷ்டம்!

## சபையில் கூறினார் ரணில் விக்கிரமசிங்க



**கொழும்பு, மார்ச் 23**
**கஷ்டமான காலத்தில் இலங்கைக்கு இந்தியாவிடம் இருந்து நிதியுதவி கிடைத்தமை அதிஷ்டமானது என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியா இப்படியான உதவியை வழங்கியது இதுவே முதல் முறை என்பதால், அது முக்கியமானது. இதனால், அந்த உதவி பற்றி தெரிவிக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

இந்தியாவின் இந்த உதவி தொடர்பாக நாட்டில் பல கதைகள் பரவி வருகின்றன. இதனால், வெளிவிவகார அமைச்சரோ, நிதியமைச்சரோ இந்த விடயம் தொடர்பாக தெளிவுப்படுத்த வேண்டியது அவர்களின் முக்கிய கடமை.

கஷ்டமான சந்தர்ப்பத்தில் நாட்டுக்கு உதவி செய்த பங்களாதேஷ் நாட்டுக்கும் நன்றியை தெரிவிக்கிறேன்-என்றார். (அ)

# திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மார்ச் 23

வெளிநாட்டு விவாகரத்து பதிவு செய்தல், திருமண முடிவுறுத்தல் அல்லது சட்ட ரீதியான பிரிதலை ஏற்றுக்கொள்ளல் தொடர்பாக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய சட்ட வரைஞரால் சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருவதுடன், திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தில் திருமணத்தைப் பதிவு செய்வதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகள் உள்வாங்கப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு வெளிநாட்டு விவாகரத்து பதிவு செய்தல், திருமண முடிவுறுத்தல் அல்லது சட்ட ரீதியான பிரிதலுக்கான ஏற்பாடுகள் குறித்த கட்டளைச் சட்டத்தில் உள்வாங்கப்படாமையால், திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

அதற்கான சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் நீதி அமைச்சர் அலி சப்ரி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# அரசாங்கத்தின் பதவி ஒன்றை ராஜினாமா செய்த கம்மன்பில

கொழும்பு, மார்ச் 23

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில அரசாங்கத்தின் மற்றுமொரு பதவியில் இருந்த விலகியுள்ளார்.

சீதாவாக்கை பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவர் பதவியில் இருந்து அவர் விலகியுள்ளார்.

இது தொடர்பாக கம்மன்பில ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

எரிசக்தி அமைச்சர் பதவியில் இருந்து தான் நீக்கப்பட்டுள்ளதால், மற்றுமொரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட பதவியான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் பதவியை தொடர்ந்தும் வகிப்பது பொருத்தமற்றது என கம்மன்பில தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் அமைச்சரவையில் இருந்துகொண்டு அரசாங்கத்தின் நடவடிக்கைகளை விமர்சித்து வந்தனர் என்ற குற்றச்சாட்டில் உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோரை ஜனாதிபதி அமைச்சு பதவிகளில் இருந்து அண்மையில் பதவி நீக்கம் செய்தார். (அ)

# 2 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருகை

கொழும்பு, மார்ச் 23

இந்த வருடத்தில் இதுவரை 250,000 இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் சுமார் 108,000 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக அதன் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க தெரிவித்தார்.

மேலும், மின்வெட்டு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சுற்றுலாத்துறையில் பல்வேறு பிரச்னைகள் இருப்பதாகவும் அவர் கூறினார். (அ)

# மணல் அகழ்வுக்கு எதிராக செயற்பட்ட சமூக செயற்பாட்டாளர் மீது தாக்குதல்

கிளிநொச்சி, மார்ச் 23

கிளிநொச்சி - தர்மபுரம், உழவனூர் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராகச் செயற்பட்டுவந்த சமூக செயற்பாட்டாளர் ஒருவர் மீது சுண்டிக்குளம் இராணுவ சோதனைச் சாவடிக்கருகில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடும் குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது அவரது ஓட்டோ அடித்து சேதமாக்கப்பட்டுள்ளதோடு, அவரும் காயமடைந்த நிலையில் தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குப் பின்னர் வீடு திரும்பியுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

உழவனூர், கல்லாறுப் பகுதிகளில் தொடர்ச்சியாகக் கட்டுப்பாடின்றி சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகிறது. எனவே இதற்கு எதிராகத் தாக்குதலுக்குள்ளான சமூக செயற்பாட்டாளர் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்ததுடன், சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் பல இடங்களில் முறையிட்டும் வந்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த சமூக செயற்பாட்டாளர் மீது கடந்த சனிக்கிழமை மதியம் 7 பேர் கொண்ட குழுவினர் சுண்டிக்குளம் - கல்லாறு வீதியில் இராணுவச் சோதனைச் சாவடிக்கருகில் வைத்துத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதோடு, அவர் பயணித்த அவரது ஓட்டோவும் அடித்து உடைத்துள்ளனர்.

இதன்போது காயமடைந்த அவர் தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்.

எனவே இது தொடர்பில் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் தெளிவாகக் குறிப்பிட்டு முறையிட்டும் பொலிஸார் இன்று வரை எவரையும் கைது செய்யவில்லை. ஆனால் தாக்குதல் மேற்கொண்டவர்கள் பொது இடங்களில் பகிரங்கமாக நடமாடித் திரிகின்றனர் எனச் சம்பந்தப்பட்டவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (அ)

# தனியார் வைத்தியசாலைகளில் நிகழும் மரணங்களுக்கும் அரசாங்கமே பொறுப்பு!

கொழும்பு, மார்ச் 23

மருந்து தட்டுப்பாடு, மின்சார துண்டிப்பு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தனியார் வைத்தியசாலைகளில் நோயாளர்கள் உயிரிழக்க நேரிட்டால் அதன் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவேண்டும் என தனியார் வைத்தியசாலை மற்றும் முதியோர் இல்லங்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தனியார் வைத்தியசாலைகளுக்கு உடனடியாக மின்சாரம் மற்றும் அவசியமான எரிபொருள்கள் என்பவற்றை வழங்குமாறு அதிகாரிகளுக்கு பல தடவைகள் கோரப்பட்டபோதிலும் அது இதுவரை இடம்பெறவில்லை என அந்த சம்மேளனத்தின் தலைவர் ஆனந்த குருப்பு ஆரச்சி தெரிவித்துள்ளார்.

சில மருந்து பொருட்களுக்கான தட்டுப்பாடு காரணமாக நோயாளர்கள் கடுமையான சவால்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவருக்கு வெற்றிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நிரந்தர பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர் ஒருவருக்கு நியமன வெற்றிடம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், யாழ்.போதனா வைத்திய சாலைக் கிளையினர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடமாகாண மக்களின் வைத்திய சேவையை மேம்படுத்தும் பொருட்டு யாழ் போதனா வைத்தியசாலைக்கு இரண்டாவது பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர் கட்டாயமாக நியமிக்கப்பட வேண்டிய தேவை இருந்தது.

இவ்விடயம் சம்பந்தமாக யாழ். போதனா வைத்திய சாலையின் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் பல தடவைகள் வைத்தியசாலை நிர்வாகத்திடமும் சுகாதார அமைச்சிடமும் சம்பந்தப்பட்ட தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்திருந்தும் வைத்தியசாலை நிர்வாகம் இரண்டாவது நிரந்தர பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர் வெற்றிடத்தை உருவாக்குவதில் ஆர்வத்தைக் காட்டவில்லை. அத்துடன் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரது முயற்சிகளுக்கு தடையாகவும் இருந்தது.

யாழ். போதனா வைத்திய சாலை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மற்றும் அரச வைத்திய அதிகாரிகள் தாய்ச் சங்கமும் பல தடவைகள் சுகாதார அமைச்சுடனும், வட பகுதிக்குரிய பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் இவ் விடயம் சம்பந்தமாக தெளிவுபடுத்தலை உண்டாக்கி பல முறை வேண்டுகோள் விடுத்தும் கடும் பிரயத்தனத்தின் பின்னரே இரண்டாவது நிரந்தர பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர் வெற்றிடம் தற்போது உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்காக எமது தாய்ச்சங்கத்திற்கும், சுகாதார அமைச்சுக்கும், மற்றும் எமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்-என்றுள்ளது. (அ)

# ரஞ்சனுக்கு விருது!

கொழும்பு, மார்ச் 23

சிறையிலிருக்கும் ரஞ்சன், மக்கள் நடிகருக்கான விருதை வென்றுள்ளாரென தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தற்போது சிறையில் தண்டனை அனுபவித்து வரும் பிரபல சினிமா கலைஞருமான ரஞ்சன் ராமநாயக்க, மக்கள் நடிகருக்கான விருதை வென்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு கொழும்பில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழாவில் அவருக்கு இந்த விருது கிடைத்துள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் தற்போது சிறையில் இருக்கும் ரஞ்சன் பல முறை மக்கள் நடிகருக்கான விருதை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu

# ஆட்டம் காணும் ராஜபக்ஷ அரசு!

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இனிமேலும் முண்டுகொடுக்கக்கூடாது என்கிறார் விமல்

கொழும்பு, மார்ச் 23

**ராஜபக்ஷ அரசு ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது. இந்த அரசுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் இனியும் முண்டுகொடுக்காமல் தீர்க்கமான முடிவெடுத்து வெளியேறவேண்டும் என முன்னாள் அமைச்சரும், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாமும் பொறுமை காத்து அரசுக்கு முண்டுகொடுத்து வந்தோம். இறுதியில் எமது அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி பிடுங்கி எடுத்தார்.

தற்போது அமைச்சர்கள் தாமாகவே பதவியிலிருந்து விலக ஆரம்பித்துள்ளனர். சுதந்திரக் கட்சியினர் இனியும் இந்த அரசுக்கு முண்டு கொடுக்காமல் தீர்க்கமான முடிவெடுத்து வெளியேறவேண்டும். ராஜபக்ஷ அரசு ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில், மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியினரைச் சமாளிக்கவே சர்வ கட்சி மாநாட்டை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடத்துகின்றார்.

இதைப் புரிந்துகொண்டு எதிர்க் கட்சிகளும் மாநாட்டைப் புறக்கணித்துள்ளன. எமது கட்சியும் மாநாட்டுக்குச் செல்லாது.

சுதந்திரக் கட்சியுடனோ அல்லது வேறு எந்தக் கட்சியு டனோ கூட்டுச் சேர்வது தொடர்பில் நாம் இன்னமும் தீர்மானம் எதையும் எடுக்கவில்லை. நாம் தற்போது மக்கள் பக்கம் நின்றே செயற்படுகின்றோம்-என்றார். (அ)

## ஈழத் தமிழர்களுக்கான நீதியை நடவடிக்கை மூலம் உறுதி செய்க

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 23

மனித உரிமைகள் பேரவையின் பிடியிலிருந்து இலங்கை தப்பிக்கமுடியாதவாறு அட்டவணை நான்குக்குள் இலங்கை விவகாரத்தை கொண்டுவர வேண்டும். அல்லது இலங்கை குறித்து தனியான நிகழ்ச்சி நிரல் உருவாக்கப்பட வேண்டும். இதன் மூலமே மனித உரிமைகள் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கையை பாதுகாக்க முடியும் என்பதுடன் ஈழத் தமிழருக்கு நீதியையும் பெற்றுத் தரக்கூடியதாக இருக்கும் - என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஈழத் தமிழர்களின் உறவினர்கள் அமைப்பின் தலைவர் திருமதி கருணாவதி பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அந்த அமைப்பு விடுத்த அறிக்கையிலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பொறுப்புக்கூறல் பொறிமுறையை உள்நாட்டில் உருவாக்குவதாக இலங்கை அரசாங்கம் கூறி காலங் கடத்திவரும் நிலையில், காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் பற்றிய அலுவலகம் (ஓ.எம்.பீ) தொடர்பில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவை தொடர்ந்தும் நம்பிக்கை வைப்பது உண்மைகள் மறைக்கப்படுவதற்கே வழிவகுக்கும்.

குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வதற்கும் இது காரணமாகலாம். அதனால், இலங்கையின் கபட நோக்கங்களைப் புரிந்துகொண்டு, பொறுப்புக் கூறலிலிருந்து இலங்கை தப்பித்துக்கொள்ள முடியாத வகையில், உறுதியான அணுகுமுறை ஒன்றை ஐ. நா. மனித உரிமைகள் பேரவை கையாள வேண்டும்.

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை முன்னிலைப்படுத்தும் இலங்கை அரசாங்கத்தின் கபட நாடகத்தை புரிந்துகொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவாக நீதி வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் சர்வதேச விசாரணை ஒன்றை இலக்காகக் கொண்ட நகர்வை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உடனடியாக முன்னெடுப்பது அவசியமாகும் என்றும் அந்த அமைப்பு கோரியுள்ளது.

## வடக்கு கல்வி அமைச்சு வாயிலை மூடி தொண்டர் ஆசிரியர்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாணம், செம்மணி வீதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண கல்வி அமைச்சின் வாயிலை மறித்து வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தங்களது நியமனம் தொடர்பாக அறிந்துகொள்வதற்காக நேற்று முன்தினம் அமைச்சுக்கு வருகை தந்திருந்த போதிலும் அதற்கான பதில் கிடைக்காமல் அவர்கள் நேற்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர் எனக் கூறப்பட்டது.

நேற்று அதிகாலையில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டராசிரியர்கள் காலையில் அலுவலகத்துக்கு வருகை வந்த உத்தியோகத்தர்களை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

அதனைத் தொடர்ந்து பொலிஸாரின் தலையீட்டினால் அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதன் பின்னர் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் இரா. வரதீஸ்வரன் தொண்டர் ஆசிரியர்களுடன் பேச்சு நடத்தினார்.

வடக்கு மாணத்தைச் சேர்ந்த 186 தொண்டர் ஆசிரியர்கள் நியமனத்தை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 3,700 மெற்றிக் தொன் எரிவாயுவுடன் மற்றுமொரு கப்பல் கொழும்பு வந்தது

கொழும்பு, மார்ச் 23

3,700 மெற்றிக் தொன் சமையல் எரிவாயுவை ஏற்றிய மற்றுமொரு கப்பல் இலங்கையை வந்தடைந்துள்ளது.

3,700 மெற்றிக் தொன் லிற்றோ சமையல் எரிவாயு கப்பல் கொழும்பு துறைமுகத்தில் தரித்துள்ளதாக லிற்றோ கேஸ் நிறுவனம் தெரிவித்தது.

குறித்த லிற்றோ சமையல் எரிவாயுகளுக்கான ஏற்றுமதிக்கான கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், கெரவலப்பிட்டியவில் அவற்றை இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் லிற்றோ நிறுவனம் கூறியுள்ளது. (அ)

## மருந்துக்கும் வரிசை உருவாகும் அபாயம்!

கொழும்பு, மார்ச் 23

நாட்டில் மருந்தக வரிசை உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசைகளுக்கு மேலதிகமாக, எதிர்காலத்தில் மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான வரிசைகள் உருவாகும் அபாயம் இருப்பதாக சுகாதார தொழிற்சங்கவாதி ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

அப்படி ஒரு நிலை ஏற்பட்டால், எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசையை எதிர்க்கும் மோசமான நிலையை நாடு சந்திக்க நேரிடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான கடன் பத்திரங்களை திறக்க முடியாததால், எதிர்காலத்தில் மருந்து தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது.

மருந்து விலை 28 சதவிகிதம் அதிகரித்தது ஒரு ஆரம்பம். எதிர்காலத்தில் ஏகபோகம் உருவாக்கப்படும்.

மருந்துகள் கிடைப்பதன் அடிப்படையில் சிகிச்சை முறைகளை முடிவு செய்ய மருத்துவர்கள் கட்டாயப்படுத்தப்படுவார்கள். இனி இந்தியக் கடன் திட்டத்தின் மூலம் மருந்துகள் இறக்குமதி செய்யப்படும். மருந்துத் தேவையில் 20 சதவீதத்தை மாத்திரமே இதன் மூலம் பூர்த்தி செய்ய முடியும்.

80 வீத அத்தியாவசிய விசேட மருந்துகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. அரச மருத்துவமனைகளில் அத்தகைய மருந்துகள் தீர்ந்துவிடும். நோயாளிகள் மருந்தகங்களில் இருந்து அவற்றைப் பெற வேண்டிய கட்டாயம் ஏற்படும். இதனால் அதிக வரிசைகள் உருவாகும்-என்றார். (அ)

## இந்திய அரசின் 6 மில்லியன் டொலரில் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம்

### அனுமதி அளித்தது அமைச்சரவை

கொழும்பு, மார்ச் 23

இந்தியாவின் 6 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியுடன் இலங்கையில் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்திற்கு தேவையான நிதி உதவியை வழங்க இந்தியா இணக்கம் வெளியிட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி கோட்டாபயவினால் இது தொடர்பான யோசனை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தநிலையில் இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை, பாரத் எலக்ட்ரானிக்ஸ் ஒவ் இந்தியா நிறுவனத்துடன் செய்துக்கொள்ளப்படவுள்ளது.

பாரத் எலெக்ட்ரானிக்ஸ் ஒவ் இந்தியா என்பது இந்திய அரசாங்கத்திற்கு சொந்தமான விண்வெளி மற்றும் பாதுகாப்பு மின்னணு நிறுவனமாகும். (அ)







பயிற்சி
ஊடகவியலாளர்கள்
தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் முன்னணி நாளிதழ் ஒன்றுக்கு பயிற்சி ஊடகவியலாளர்களாக இணைந்து கொள்ள விருப்பமுள்ளவர்களிடம் விண்ணப்பம் எதிர்பார்க்கப்படுகின்றது.



- எழுத்துத்துறையில் ஆர்வமுள்ள
- துடிப்பும் துணிவும் உள்ள
- செய்தித்துறையில் விருப்புள்ள
- சாதிக்கும் எண்ணம் கொண்ட

இளைஞர், யுவதிகள் இதில் இணைந்துகொள்ள முடியும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
075 315 3153
trainingjournalistjaffna@gmail.com

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## சிங்கள...

மேம்பாடாகும். ஆனால், இவை நடைமுறை சாத்தியமாகும் விடயத்திலேயே அதன் தன்மை உறுதிப்படுத்தப்படும்.

இந்த திருத்தங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பித்த போதிலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இது குறித்து அதிருப்தியையே வெளிப்படுத்தியிருந்தார். பொறுப்புக்கூறல் விடயத்தில் கலப்பு நீதிமன்ற முறையை இலங்கை நிராகரித்து உள்ளக பொறிமுறையை வலியுறுத்தியமை, நாட்டின் இன முரண்பாடுகள் விடயத்தில் சட்டம் மற்றும் நீதிப் பொறிமுறையானது ஊழல் மிகுந்ததாக உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியிருந்தார். பக்கசார்பு, பாராபட்சம் காணப்படுவதாகவும், இது முழுமையான உள்ளக விசாரணைகளையோ நீதி பொறிமுறையையோ பலவீனப்படுத்தும் என்றார்.

தேசிய பாதுகாப்பு என்ற விடயத்தில் தேசியம் என்பது என்ன? வெறுமனே சிங்கள மக்களை மட்டுமே பாதுகாப்பதுதான் தேசியமா? ஒரு தரப்பை மட்டுமே பாதுகாப்பது தேசியமா அல்லது சகல இன மக்களையும் பாதுகாப்பது தேசியமா? பெரும்பான்மையின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தீர்மானம் எடுப்பது தேசியம் ஆகாது. பெரும்பான்மையின் தேவைகளை பூர்த்தி செய்வதை தேசியம் என அர்த்தப்படுத்த வேண்டாம். பல்வேறு அடையாளங்கள் இந்த நாட்டில் இருக்கின்ற நிலையில் பல்லினத்தன்மை கொண்ட நாடாக இலங்கை உள்ளதென நாம் கூறுகின்ற நிலையில் இரண்டு மூன்று இனங்கள் இந்த நாட்டில் வாழ்கின்ற சூழலில் சகலரதும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டால் மட்டுமே அது தேசியமாகக் கருதப்படும்.

ஆகவே, நீங்களே இந்த நாட்டின் உரிமைகளை பறிக்கும் விதமாக செயல்படுகின்றீர்கள் என்பதை எவராலும் மறுக்க முடியாது. இந்த தேசம் ஒரு தரப்பை மட்டுமே ஏற்றுக்கொண்டு ஏனைய தரப்பை நிராகரித்துக் கொண்டுள்ளது. ஆனால், எம்மை தொடச்சியாக புறக்கணித்து - புறந்தள்ளிக்கொண்டுள்ளீர்கள். இவ்வாறான நிலையில் எவ்வாறு எமது மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். எமது மக்கள் மறுக்கப்படுகின்ற நிலையில், எமது காணிகள் பறிக்கப்படுகின்ற நிலையில், எமது மத அடையாளங்கள் அழிக்கப்படுகின்ற நிலையில் நாம் என்ன செய்ய முடியும்? பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வடக்குக்கு விஜயம் செய்த வேளையில் மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். ஜனநாயக ரீதியில் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

புலம்பெயர் தமிழர்கள் உலகில் பல செல்வந்த நாடுகளில் உள்ளனர், அவர்களிடத்தில் இந்த நாட்டை மீட்கும் செல்வம் உள்ளது. அவர்களை இணைத்துக் கொண்டால் இன்றைய நெருக்கடி நிலைக்கு தீர்வு கிடைக்கும். ஆனால், அதற்கு நீங்கள் இடம் கொடுக்கவில்லை, இனவாதத்தை வளர்த்துக் கொண்டுள்ளீர்கள். இலங்கையில் இனவாதம் பரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது. சிங்கள மக்களுக்கு தொடர்சியாக பொய்களை கூறிக்கொண்டுள்ளீர்கள். சிங்கள மக்களிடம் நான் கேட்பது அதுவே, நீங்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு பொய்களுக்கு ஏமாந்துவருகின்றீர்கள். அதுவே இந்த நாடு வீழ்ச்சியடைய காரணம் - என்றார்.

## சர்வதேசத்தை...

சப்ரியின் பொறுப்பில் இருக்கின்ற போதும் இந்த திருத்தத்தை வெளியுறவு அலுவல்கள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கொண்டு வந்தமையானது,இந்த நோக்கத்தை எடுத்துக் காட்டுவதாக ரஹ்மான் நேற்று பாராளுமன்றில் குறிப்பிட்டார்.

இலங்கை அரசாங்கத்துக்கு இன்று சர்வதேசத்தில் பாரிய அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்ற நிலையில் அதனை குறைக்க எடுக்கப்படும் முயற்சியே இது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை புதிய திருத்தத்தின்படி, சட்டத்தின் அடிப்படைகள் மாறவில்லை.

அமைச்சருக்கு சந்தேகம் ஏற்பட்டால் அவரை இந்த சட்டத்தின்கீழ் கைது செய்து தடுத்து வைக்கமுடியும்.

12 மாதங்களுக்கு வீட்டுக்காவலில் ஒருவரை தடுத்து வைக்கமுடியும்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள ஒருவரை நீதிவான் ஒருவர் சென்று பார்க்கமுடியும். அவர் தொடர்பில் உத்தரவுகளை வழங்கமுடியும்.

எனினும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவரின் இடத்தை மாற்றுவதற்கு நீதிவானுக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்று முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டினார்

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், தடுத்து வைக்கப்பட்டுள்ளவரின் இடத்தை மாற்றுவதற்கு நீதிவானுக்கு அதிகாரம் வழங்குவதற்கான திருத்தம் கொண்டு வரப்படும் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, அமைச்சருக்கு சந்தேகம் உள்ள ஒருவரை காவல்துறையில் தடுக்கவைக்காமல், தேவையான இடத்தில் தடுத்து வைக்கமுடியும் என்ற அடிப்படையிலும் மாற்றங்கள் செய்யப்படவில்லை என்று முஜிபுர் குறிப்பிட்டார்.

அத்துடன் வாக்குமூலத்தின்போது ஒருவர் எவரையாவது சுட்டிக்காட்டினால் அவரையும் 12 மாதங்களுக்கு தடுத்து வைக்கமுடியும் என்ற அடிப்படையிலும் திருத்தம் கொண்டு வரப்படவில்லை.

இந்தநிலையில் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டபோதும் அவருடைய குற்றம் நிரூபிக்கப்படவில்லை.

எனினும் அவரை தொடர்ந்தும் தடுத்து வைப்பதற்காக, பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த கவிஞர் ஜசீமிடம் ஹிஸ்புல்லாஹ்வுக்கு எதிராக வாக்குமூலம் வழங்குமாறு கோரப்பட்டுள்ளதாக முஜிபுர் ரஹ்மான் குறிப்பிட்டார்.

இதற்கு மத்தியில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டிருந்த சஹ்ரானுடன் இணைந்திருந்த சிலர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் என்பதையும் முஜிபுர் ரஹ்மான் பாராளுமன்றில் சுட்டிக்காட்டினார். (அ)

## பயங்கரவாத சட்ட...

செவ்வாய்க்கிழமை பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்ட மூல இரண்டாம் மதிப்பீட்டை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் சமர்ப்பித்து விவாதத்தை ஆரம்பித்து வைத்தார்.

இதில் அரசு தரப்பை தவிர்த்து அனைத்து எதிர்க்கட்சிகளும் இந்த பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலத்தை எதிர்த்தே கருத்துக்களை வெளியிட்டன.

காலை 11 மணிக்கு ஆரம்பித்த விவாதம் மாலை 4.30 மணிக்கு முடிவுக்கு வந்த நிலையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் எம்.பி. யான எம்.ஏ.சுமந்திரனும் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் எம்.பி.யுமான அநுரகுமார திஸநாயக்கவும் சட்டமூலம்மீது ஒரே நேரத்தில் வாக்கெடுப்பைக் கோரினர் .

இதனையடுத்து நடந்த வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் அதன் பங்காளிக் கட்சிகளான தமிழ் முற்போக்குக் கூட்டணி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன எதிராக வாக்களித்தன.

இறுதியில் ஆதரவாக 86 வாக்குகளும் எதிராக 35 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 51 மேலதிக வாக்குகளால் பயங்கரவாத தடுப்பு சட்ட மூலம் உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்துக்கேற்ப திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. (ஐ)



# மட்டக்களப்பில் எரிவாயு, டீசலுக்கு மக்கள் வரிசையில் நிற்கும் அவலம்

மட்டக்களப்பு, மார்ச் 23

மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிவாயு மற்றும் டீசல் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் நீண்ட வரிசையில் நிற்கவேண்டிய நிலையுள்ளது.

அத்துடன் தொடர்ச்சி யாக எரிவாயு மற்றும் டீசல் விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக டீசல் வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இரா ணுவத்தின் பாதுகாப்புடன் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் நிலையில் குறித்த எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசைகளில் வாகனங்கள் நின்று எரி பொருளைப்பெற வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இதேவேளை, நேற்று காலை மட்டக்களப்பு நகரின் பயனியர் வீதியில் எரிவாயு விநியோகம் நடைபெறும் என மக்களுக்கு கிடைத்த அநாமதேய தகவல் காரணமாக பெருமளவான மக்கள் அப்பகுதியில் கூடியதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

குறித்த வீதியில் முந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் நீண்ட வரிசையில் காஸ் சிலிண்டருடன் நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் நின்ற நிலையில் எரிவாயு விநியோகம் நடைபெறாத காரணத்தினால் அங்கிருந்து கலைந்து சென்றனர். (அ)

## பயங்கரவாத...

அமைச்சர் உறுதியளித்தார்.

இதனை அடுத்து இடம்பெற்ற இரண்டாம் வாசிப்பின்போது உரை யாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அரசாங்கம் கொடூரமான சட்டத்தில் சில மாற்றங்களை மேற்கொண்டு வந்துள்ளதாக குற்றம் சாட்டினார்.

கொடூரமான சட்டத்தில் சில மாற்றங்களை கொண்டுவந்து பொது மக்களையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்ற முயற்சிக்கின்றது என்றும் அவர் கூறினார். (அ)

## மக்களின்...

பத்திரன நேற்று செவ்வாய்க்கிழமை நடை பெற்ற ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

எரிபொருள் மற்றும் எரிவாயுவு கொள்வனவுக் காக நாடாளாவிய ரீதியில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்தோடு பல இடங்களில் அரசாங்கத்திற்கு எதிராக போராட்டமும் இடம் பெற்றுவரும் நிலையில் அரசாங்கம் இதனை அறிவித்துள்ளது. (அ)

## சர்வதேச...

குறிப்பிட்டார்.அரசாங்க தகவல் திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் மிலிந்த ராஜபக்ஷவும் இதில் கலந்து கொண்டார்.

இது தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்துடன் செயல்படும்போது தொழில்நுட்ப ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடைமுறை குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

பொருளாதார சபையின் ஆலோசனைக் குழு என்ற ரீதியில் பல யோசனைகளை குழுவினர் முன்வைத்திருந்தனர்.

இதில் குறுகிய கால தீர்விலும் பார்க்க நீண்டகால தீர்வே சபையின் அபிலாஷையாக அமைந்திருந்தது.

முக்கியமாக தற்பொழுது நிலவும் நிதி நெருக்கடி தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் செயற்படவேண்டிய முறை தொடர்பாக குறிப்பிடப்பட்டதுடன் அதற்கு தேவையான ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது குறித்த தேவையான நடைமுறைகள் தொடர்பிலும் அவர்கள் அறிவித்திருந்தனர்.

கடனை மறுசீரமைத்தல் தொடர்பில் தொழில்நுட்ப விடயங்கள், அவை தொடர்பில் கையாளப்படவேண்டிய முறைகள் குறித்தும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன-என்றார். (அ)

## தமிழ்நாடு...

இவ்வாறு இலங்கையைச் சேர்ந்த ஆறு பேர் இறக்கிவிடப்பட்டுள்ளனர்.

ஆண் ஒருவர், 2 பெண்கள், 3 குழந்தைகள் அடங்கிய இலங்கை தமிழர்கள் 06 பேரை இறக்கிவிட்டு படகு திரும்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் இந்திய கடலோர காவல் படையினருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அவர்களை மீட்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தமிழக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த குடும்பம் எந்த பகுதியைச் சேர்ந்தது என்பது தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை. (அ)

## நாணய...

நிதியம் வழங்கியுள்ள அறிக்கையை பாராளு மன்றத்தில் முன்வைக்குமாறு நாம் பல தடவைகள் கோரிக்கை விடுத்தோம். ஆனால் அந்த அறிக்கை இன்னும் முன் வைக்கப்படவில்லை. இது சிறப்புரிமை மீறல் பிரச்னையாகும்.

ஜனாதிபதி தலைமையில் சர்வக்கட்சி மாநாடு நடைபெறவுள்ளது. அறிக்கை கிடைத்திருந்தால் பேச்சு நடத்துவதற்கு அது சிறப்பாக இருந்திருக்கும்.

எனவே, அறிக்கையை சமர்ப்பிக்குமாறு மத்திய வங்கி ஆளுநர் மற்றும் நிதி அமைச்சர் செயலாளர் ஆகியோருக்கு அறிவித்தல் விடுக்கப்பட வேண்டும்-என்றார். "சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை இலங்கையிடம் இன்னும் அதிகாரப்பூர்வமாக கையளிக்கப்படவில்லை. அவ்வாறு கையளிக்கப்பட்டதும், அது பகிரங்கப்படுத்தப்படும்." - என்று நிதி இராஜாங்க அமைச்சர் பதில் வழங்கினார். (அ)

## விக்னேஸ்வரன்...

பாராளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம், இரா. சாணக்கியன் ஆகியோர் சபை அமர்வில் பங்கேற்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்.

எனினும், பயங்கரவாத திருத்த சட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 51 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-பாஸ் என்கிற பாஸ்கரன், தமிழ் படம் திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**

7.00 மணி : பாரதீ



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
9.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு